விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 31 ஞாயிற்றுக்கிழமை (16.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 240




## முகாம்களில் தடுத்து வைத்திருப்பது விதிமுறைக்கு மாறானது

# தமிழ் மக்களுக்கு அமைதியே உடனடித் தேவையாகவுள்ளது


### ஐ.நா. தூதரக அதிகாரி டெனிசி ஒட்டிஸ் தெரிவிப்பு

(நியூயோர்க்)

வன்னியில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் உடனடித் தேவை அமைதியே என்று அந்த முகாம்களில் பணியாற்றிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதரக அதிகாரி டெனிசி ஒட்டிஸ் என்ற பெண்மணி தெரிவித் துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

கைலாச வாகனத்தில் கந்தனின் திருவீதியுலா



## பத்மநாதனுக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தற்போதைய தலைவர் எனக் கூறப்படும் அந்த அமைப்பின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் குமரன் பத்மநாதனுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்படும் எனவும் அந்த தகவல்கள் கூறுகின்றன. அரசுக்கு எதிராக செயற்பட்டமை, விடுதலைப் புலிகளுக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## 2 இளம் பெண்களின் சடலம் கொழும்பில் நேற்று மீட்பு

(கொழும்பு)

கொழும்பில் பௌத்தலோக மாவத் தைக்கு அருகே உள்ள வாய்க்கால் ஒன்றில் மலையகத்தைச் சேர்ந்த இரு இளம் பெண்களின் சடலங்கள் நேற்றுக் காலை பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இருவரும் கொல்லப்பட்டு இந்தப் பகுதியில் போடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்தே இந்த இரு சடலங்களும் மீட்கப்பட்டன. கொல்லப் (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்த்தல் துரிதமாக முன்னெடுக்கப்படும்–ஆளுநர்

(கொழும்பு)

மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்தவர்களை யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்த்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

திருமலை மற்றும் யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் செயற்திட்ட அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டம் வடமாகாணம் முழுவதும் வெற்றிகரமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. இது தவிர யாழ். மாவட்ட மீனவர்கள் மற்றும் பொது மக்கள் (14ஆம் பக்கம் பார்க்க)

## கே.பியுடன் கைது செய்யப்பட்டவர் பல விடயங்களை வெளியிட்டார்

### -அமைச்சர் ரம்புக்வெல

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் குமரன் பத்மநாதனுடன் கைது செய்யப்பட்ட மொறிஸ் என்பவர் வெளியிட்டுள்ள விடயங்களை வைத்து ஓரிரு தினங்களில் எதிர்பாராத சிலர் குறித்த தகவல்கள் வெளிவருமென பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை விரை மீள்குடி யேற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளதாகவும் இச்சந்திப்பில் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ந-5,3)

# தமிழர்களுக்கு உரிமை கொடுக்க ஜனாதிபதி ஒருபோதும் தயாரில்லை

## குமுதத்திற்கு நிமல்கா பெர்னாண்டோ பேட்டி

(கொழும்பு)

தமிழர்களுக்கு சோறு, பிரியாணி கொடுப்பாரே தவிர உரிமைகள் எதனையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொடுக்க மாட்டார் என்று சிங்கள இனத்தைச் சேர்ந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் குமுதம் குழுமத்தின் வாரம் இரு முறை வெளிவரும் குமுதம் றிப் போட்டர் ஏட் டுக்கு அவர் வழங்கிய நேர் காண லில் மேலும் தெரிவித்துள்ளதாவது; (02ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

கொழும்பு பிரபல ஆசிரியர் தயாரித்த 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள் உங்கள் வலம்புரியில் ஒவ்வொரு நாளும் வெளிவரும்.

## பஸ்ஸில் வெளி மாவட்டங்களுக்கு செல்ல நாளைமுதல் முன்பதிவு அவசியம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து ஏ-9 பாதையூடாக வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ்களில் வெளி மாவட்டங்களுக்கு செல்பவர்களின் நலன் கருதி யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் காரைநகர் ஆகிய இடங்களில் பஸ் முன்பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது; (14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படைத் தளபதி சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம்


(யாழ்ப்பாணம்)

கூட்டுப்படை தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, தரைப்படைத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜெயசூரிய மற்றும் தரைப்படைத் தலைமையக அதிகாரிகள் நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு திடீர் பயணம் மேற்கொண்டனர்.

பலாலி விமான நிலையத்தில் வந்து இறங்கிய தளபதிகளை யாழ். மாவட்ட (14ஆம் பக்கம் பார்க்க)



## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தின் எரிபொருள் நிலையம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது. திறப்புவிழா நிகழ்வினை படங்களில் காணலாம்.

# மினிவான்–மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

## நீர்வேலியில் சம்பவம்

(நீர்வேலி)


மினிவான்–மோட்டார் சைக்கிள் என்பன நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் நீர்வேலி கந்தசுவாமி கோவில்–பருத்தித்துறை வீதியில் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர்கள் நீர்வேலி கந்தசுவாமி ஆலய பின் வீதியூடாக பருத்தித்துறை வீதியை கடக்க முற்பட்ட வேளை யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி வேகமாக சென்ற மினிவான் வேகக் கட்டுப்பாட்டையிழந்து மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானதுடன் சிறிது தூரம் இழுத்துச் சென்று மின் கம்பத்துடன் மோதியுள்ளது.

இவ் விபத்தில் நீர்வேலி தெற்கைச் சேர்ந்தவர்களான நவரட்ணம் சிவபுனிதம்(வயது-47), இராமநாதன் செல்வமூர்த்தி (வயது27) ஆகிய இருவருமே படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-7,30)

# மரண அறிவித்தல்



## சுப்பையா வைத்திலிங்கம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா வைத்திலிங்கம் 13.08.2009 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா சரஸ்வதி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் கதிர்காமத்தம்பி, சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் கதிர்காமநாயகியின் அன்புக் கணவரும் காலம் சென்ற தங்கச்சியம்மா மற்றும் இராசம்மா, சீனியம்மா, நாகம்மா, பத்மாதேவி, பொன்னம்பலம், தர்மலிங்கம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஏரம்பமூர்த்தி, சண்முகராஜா(சிவசக்தி), காலம் சென்ற சிவானந்தன்(கோபுரம் அரிசி ஆலை) மற்றும் கருணைத் தவசோதி(கனடா) ஆகியோரின் மைத்துனரும்,

செல்வமலர், ஜெயக்குமரன்(நோர்வே), ஜெயகலா(கனடா), ஸ்ரீகலைவாணி(திருகோணமலை), தனகேசவன்(லண்டன்), பிரசாந்தி(ஆசிரியை, யாழ்ற்றன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமாரன்(கணேசன் சென்ரர்), நந்தினி(நோர்வே), அமரர் யோகதாஸ்(கனடா) மற்றும் கணேசகுமார்(இலங்கை துறைமுக அதிகார சபை, திருகோணமலை), பிரதீபா(லண்டன்), சுரபாஸ்கரன்(ஆசிரியர்,வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜா, சிவகாசிக்கா, யதுஷன், ஜனகன், ஜகதுக்ஷா, தீர்ப்தன், சாருகேசி, ஆரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கணேசன் சென்ரர்,
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

தகவல்
மருமகன் து.சிவகுமாரன்

(3249)

# தமிழர்களுக்கு உரிமை கொடுக்க...

***இலங்கையின் இன்றைய உண்மை நிலை என்ன?***

இலங்கையில் இன்று அசாதாரண சூழ்நிலைதான் நிலவுகின்றது. போர் முடிந்துவிட்டதாக அரசு அறிவித்தாலும் கூட உண்மையில் என்ன நடக்கின்றது என்பது யாருக்கும் தெரியாது. ஊடகங்கள் உண்மைச் செய்திகளை வெளியிட முடியாத அளவிற்கு கட்டுப்பாடு இருக்கின்றது.

சண்டே லீடர் என்ற பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க உள்ளிட்ட 14 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டதால் பல பத்திரிகையாளர்கள் தொழிலை விட்டே ஓடிவிட்டார்கள். அரசு சொல்லும் செய்திகள் மட்டுமே வெளியாகின்றன. அதில் எந்த அளவிற்கு நம்பகத் தன்மை இருக்கும் என யாருக்கும் தெரியாது.

***கடைசிக்கட்டச் சண்டையில் சிங்கள இராணுவம் அப்பாவி மக்கள் மீது குண்டுகளை வீசி போர் விதிமுறைகளை மீறியிருக்கின்றது என்கின்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கிறதே?***

உண்மைதான். இரண்டு தரப்புமே பல மனித உரிமை மீறல்களைச் செய்திருக்கின்றன. மருத்துவமனைகள் மீது குண்டுகளை வீசக் கூடாது என்பது சர்வதேச போர் நெறிமுறை. ஆனால் இராணுவம் வவுனியா மருத்துவமனையில் குண்டுகளை வீசியிருப்பதை நான் அங்கு சென்றபோது கண்கூடாகவே பார்த்தேன். அதுவும் முள்ளிவாய்க்காலில் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் நடைபெற்றிருக்கின்றன.

இறுதிக்கட்ட போரில் 2000 பே!! பலியா!கி இருப்பார்கள் என்று அரசு சொன்னாலும்கூட உண்மையில் 20,0OOஇற்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்கிறார்கள். சில சிங்கள இராணுவ அதிகாரிகளிடம் பேசினோம். சுமார் 35 இராணுவ வீரர்கள் ஊனமுற்றிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் அனுராதபுரத்தில் கட்டப்பட்டிருக்கும் புதிய இராணுவ மருத்துவமனைகளில் தங்க வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களையும் யாரும் சந்திக்க முடியாது.

***போர் முடிந்து விட்ட நிலையிலும் வவுனியா மக்களை முகாமிலேயே அரசு தங்க வைத்திருக்கின்றதே. அங்கு வசதிகள் எப்படி? மனித உரிமை ஆர்வலர் என்ற முறையில் நீங்கள் அங்கு சென்று பார்த்தீர்களா?***

சற்று சிந்தித்தவர்; பாவம் தமிழர்கள் என்று சோகத்தோடு கூறிவிட்டுத்தான் தொடர்ந்தார். சுமார் 3 இலட்சம் தமிழ் மக்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் மெஜாரிட்டி பேர் கிரிமினல்களோ, போர்க் குற்றவாளிகளோ அல்ல அப்பாவிகள். விசாரித்து விட்டு அவர்களை ஊருக்கு அனுப்பிவிட வேண்டியதுதானே. ஆனால் அந்த முகாம்களுக்குள் செல்ல யாருக்கும் அனுமதி கிடையாது. முகாம்களின் நிலைமையும் படு மோசம். ஆயிரம் பேருக்கு ஒரு மலசல கூடம்தான். அது போதாது என்று எங்களைப் போன்றவர்கள் சொன்னதால் 800 பேருக்கு ஒரு மலசல கூடம் என மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

முகாம்களில் உள்ள தமிழர்களுக்கு குடிக்கக்கூட சொற்ப தண்ணீர்தான் வழங்கப்படுகின்றது. குளிப்பது என்றால் முறை வைத்துத்தான் குளிக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் நான்கு பேர் என்றால் அப்பா இன்றைக்குக் குளித்தால் அம்மா மூன்று நாட்களுக்குப் பிறகே குளிக்க முடியும்.

பசியால் அழும் குழந்தைகளுக்கு பால் மா கிடையாது. இப்போதே இந்த நிலைமை என்றால் விரைவில் பருவ மழை தொடங்கி விடும். முகாம்களுக்குள் மழை நீர் பெருக்கெடுக்கும்போது மக்களால் தங்க முடியாது. மழை பெய்கிறதே என்று எழுந்து ஓடினால் இராணுவம் சுட்டுவிடும் என்ற நிலைதான் என்கிறார்கள்.

நான் முகாம்களுக்குள் செல்லவில்லை என்றாலும் மருத்துவமனைக்குப் போனேன். அங்கிருந்தவர்களின் நிலைமை மிகவும் பரிதாபம். அங்குள்ள ஒரு தாயின் சோகத்தைச் சொல்ல வார்த்தைகள் இல்லை. இராணுவம் குண்டு போட்ட போது தப்பிப்பதற்காககுடும்பத்தோடு ஓடியிருக்கிறார்கள். அப்போது ஒரு குண்டு வெடித்ததில் அந்த கர்ப்பிணித் தாயின் இடுப்புக்குக் கீழ் சிதைந்து விட்டது.

அப்போது அவர் மேல் பிணமாக விழுந்திருக்கிறாள் அவரது பத்துவயது மகள். அதன் பிறகே அவருக்கு குழந்தை பிறந்திருக்கின்றது. அதை வளர்க்கக் கூடிய மனநிலையில் அவர் இல்லை. தற்போது முகாம்களில் இருந்த 3 ஆயிரம் முதியவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

ஆனால் இளைஞர்களின் கதி அதோ கதிதான். தீவிரவாதிகள் என்று அடையாளம் காட்டும் பட்சத்தில் அவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். அதன் பிறகு அவர்கள் என்ன ஆகிறார்கள் என்றே தெரியவில்லை. ஆக, பாவம் தமிழர்கள்.

***இந்த அவலத்தை மாற்ற முடியாதா?***

முடியும். அதுவும் வெளிநாடுகளில் இருந்து அழுத்தம் கொடுத்தால் மட்டுமே தமிழர்களின் அவலம் மாறும். குறிப்பாக இந்தியாவின் அழுத்தம் மட்டுமே நல்ல பலனை கொடுக்க முடியும். அதிபர் ராஜபக்ஷ எனது நண்பர். அவரைப்பற்றி முழுமையாக எனக்குத் தெரியும்.

அவர் அதிபர் ஆவதற்கு முன்பு ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் இருவரும் சேர்ந்துதான் கலந்து கொண்டோம். அவர் வேண்டுமானால் தமிழர்களுக்கு சோறு, புரியாணி கொடுப்பார். உரிமைகள் கொடுக்க மாட்டார். தமிழர்களுக்கு உரிமைகள் கொடுக்கப்போவதாக அவர் இந்தியாவை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். அவருக்கு அப்படியொரு எண்ணமே கிடையாது. எள்முனையளவு உரிமைகளைக் கூட அவர் தமிழர்களுக்குக் கொடுக்க மாட்டார். இப்படிச் சொல்வதன் மூலம் நானும் டார்கெட் பண்ணப்படலாம். இந்தியாவும், தமிழ்நாடும் 500 கோடி ரூபாய் நிதி, பலாலி விமான நிலையம் புதுப்பிப்பு என்பதெல்லாம் சரிதான். அதே சமயத்தில் தமிழர்களின் வாழ்வாதாரத்தைப் பற்றியும் கவலைப்பட வேண்டும். முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்கள் அனைவருக்குமே சொந்த வீடு இருக்கிறது. மீனவர்கள், ஆசிரியர்கள், டாக்டர்களும் கூட இருக்கிறார்கள். அவர்களில் யாருமே பிச்சைக்காரர்கள் அல்ல, வசதியாக வாழ்ந்தவர்கள். அவர்களையெல்லாம் 180 நாட்களுக்குள் சொந்த வீட்டிற்கு அனுப்பிவிடுவோம் என்று ராஜபக்ஷ சொன்னார். ஆனால் அதற்கான அறிகுறிகளே இல்லை என்பதை இந்தியா புரிந்து கொண்டு அழுத்தம் கொடுத்தால் ஒழிய தமிழர்களுக்கு விடிவு காலம் பிறக்காது.

***பிரபாகரனின் மரணத்தில் சந்தேகம் எழுப்பப்படுகிறதே?***

சிங்கள இராணுவ அதிகாரிகளிடம் நான் பேசிய வரையில் அவர் இறந்துவிட்டார் என்றே சொல்கிறார்கள். ஆனால் எப்படி இறந்தார் என்று இராணுவம் வெவ்வேறு கருத்துக்களைச் சொல்லிக் குழப்புகிறது தவிர டி.வியில் யூனிஃபார்ம், அடையாள அட்டை சகிதம் காட்டியது அவரது உடல் அல்ல என்பதே பெரும்பாலான தமிழ் மற்றும் சிங்கள மக்களின் கருத்து. தமிழர்கள் அதிலும் குறிப்பாக, வயதானவர்கள் டி.வியில் அவரது உடலைக் காட்டும் போது பார்க்கக் கஷ்டப்பட்டு கண்ணீருடன் தலை குனிந்ததை நானே நேரில் பார்த்திருக்கிறேன்.

பிரபாகரனைப் பொறுத்த வரையில் அவர் ஒரு–வோர் ஹீரோ–என்பதில் சந்தேகம் இல்லை. நல்லவர்; வல்லவர்; ஊழல் செய்யாதவர்; தூய்மையான நிர்வாகத்தை தந்தவர் என்கின்ற இமேஜ் இருக்கின்றது. போர் நிறுத்த சமயத்தில் நான் கிளிநொச்சியில் உள்ள மடு தேவாலயத்திற்கு சென்றிருந்தேன் அங்கு தமிழர்கள் தன்னிறைவு பெற்றவர்களாய் வாழ்ந்ததைப் பார்த்தேன் அரிசி, ரொட்டி, காய் கனிகள் போன்ற அத்தியாவசிய பொருள்கள் எல்லாம் மிகவும் மலிவான விலையில் கிடைத்தன.

அதைப்பார்த்து எனது கார் டிரைவர்; அம்மா நாமும் இங்கேயே வந்து செட்டிலாகி விடலாம் போல என்று சொன்னார். ஆனால் அவ்வளவு பெரிய ஹீரோ தேர்தலைப் புறக்கணிக்கச் சொன்னது, பேச்சு வார்த்தையை நம்பாதது, கடைசிக்கட்ட சண்டை என்று தெரிந்தும் அங்கேயே இருந்தது சரியானது அல்ல என்றே நான் சொல்லுவேன்.

***இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு தான் என்ன?***

ராஜீவ்–ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின்படி இலங்கை அரசின் 13 வது சட்டப்பிரிவை அமுல்படுத்துவதே தமிழர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு. அதாவது வட–கிழக்குப் பகுதிகளில் பிராந்திய அரசு அமைக்கப்பட வேண்டும் என்பதே அச்சட்டப் பிரிவு. இதை ஜே.வி.பி., புத்த பிக்குகள் தவிர இலங்கையிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளுமே ஒப்புக் கொள்கின்றன.

தமிழர்களின் தாய்நாடும் இதுவே. அவர்களும் மண்ணின் மைந்தர்கள்தான் என்பதை புரிந்து கொண்டு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். இந்தியாவும் கருணாநிதியும் தமிழ் மக்கள் படும்பாட்டைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குநீதிகிடைக்கவழிசெய்யவேண்டும்.

***காலம் காலமாய் வஞ்சிக்கப்பட்டதால் தான் தனித் தமிழ் ஈழக் கோரிக்கை வந்தது. இனிமேல் அது சாத்தியமா?***

முதலில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களை அவர்களது சொந்த வீட்டிற்கு அனுப்ப வேண்டும். அதோடு நின்றுவிடாமல் கூட்டாட்சித்தத்துவத்தின் அடிப்படையில் இலங்கையின் ஆட்சி முறை மாற்றப்பட வேண்டும். ஈழப்பிரச்சினைக்கு இலங்கையில் கூட்டாட்சி அமைவதே சரியான தீர்வாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

***புலிகள் அமைப்பு மீண்டும் தலைதூக்க முடியுமா?***

முதலில் சொந்த வீடுகளில் மக்கள் வாழத் தொடங்கட்டும். மக்களிலிருந்து தானே தலைவர்கள் வரமுடியும். எப்போது தேர்தல் நடந்தாலும் விடுதலைப் புலிகள் மக்களை மிரட்டுகிறார்கள் என்று ஆட்சியாளர்கள் சொல்லி வந்தார்கள். இப்போது விடுதலைப் புலிகள் முறியடிக்கப்பட்ட நிலையிலும் வவுனியாவை அவர்களின் ஆதரவுக் கட்சி தானே கைப்பற்றியிருக்கிறது.

***தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் நடப்பதாகச் சொல்கிறார்களே?***

இது மோசமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். சிறுபான்மை சமுதாயத்தின் அடையாளம் மற்றும் ஜனநாயக உரிமைகளை அழிக்கும் முயற்சி இது. இதெல்லாம் சாத்தியமானால் எங்களைப் போன்ற மனித உரிமை ஆர்வலர்கள் வேலை செய்யவே முடியாது. (ந-5)

## ஏகாதசி பூஜை

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஏகாதசி விரத பூசை இடம்பெறவுள்ளது.

மாலை சங்கல்பத்துடன் ஆரம்பமாகி அபிசேக ஆராதனைகளை அடுத்து சுவாமி உள் வீதி, வெளிவீதி வலம் வரும் திருக்கோலைக் காட்சி இடம்பெறும். (ஓ-36)

## ஐசிங் கேக் கண்காட்சியும் தையற் கலைக் கண்காட்சியும்

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி படிப்பகம் நடத்தும் தையற் பயிற்சி அலகின் ஐசிங்கேக் கண்காட்சியும், தையற் கலைக் கண்காட்சியும் நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் கணபதி படிப்பக உபதலைவர் செல்வன் ச. பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஜி.ஓ.சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் வி. ஆனந்தகுமார், யாழ். ஜி.ஓ.சி நிறுவன நிர்வாக இயக்குநர் திருமதி யசிந்தா அன்ரன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற செயலாளர் திருமதி. தி. சாந்தினி, வல்லை மகளிர் மகாவித்தியால அதிபர் திருமதி. கு. நகுலாம்பிகை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

# நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் சமய சொற்பொழிவுகளும், கலை நிகழ்வுகளும் நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை எங்கே தேடுகின்றாய் என்னும் விடயம் பற்றி ஓய்வுபெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து விசேட நிகழ்வாக திருமதி புவனேஸ்வரி செல்லத்துரையின் சங்கீதக்கச்சேரியும், ஆவரங்கால் அருள்முருகன், கொக்குவில் தலையாளி ஞானவைரவர், சித்தன் கேணி சிவசக்தி ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

⌘ ⌘ ⌘

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் கானகதாவாரதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வரும் 'கம்பராமாயணம்' பற்றிய தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு 'அனுமன் தூது' என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார்.

⌘ ⌘ ⌘

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை எல். திலகநாயகம் போல் இசை வழங்கவுள்ளார்.

இதில் அணி செய் கலைஞர்களாக வயலின் கே. குகபரன், மிருதங்கம் எஸ். துரைராசா, கடம் சதா வேல்மாறன், முகர்சிங் என். சதீஸ்குமார், கெஞ்சிரா செல்வன் கிருபா ஆனந்தகோபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## கலச சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் வடபத்திரகாளி அம்பாளின் கும்பாபிஷேகத்தை முன்னிட்ட மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு கலச சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதில் அன்றைய தினம் வட பத்திரகாளி அம்பாளுக்கு கலச பால் அபிஷேகமும் சிறி முத்துமாரி அம்பாளுக்கு சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## நடமாடும் இரத்ததான முகாம்

வல்வெட்டித்துறை மக்களின் ஏற்பாட்டில் வல்வை மாவட்ட வைத்தியசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினரால் நடமாடும் இரத்ததான முகாம் நடத்தப்படவுள்ளது.

தன்னார்வமுள்ள குருதிக் கொடையாளர்கள் பங்கு கொண்டு இரத்த தானம் வழங்கி உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கி வைத்திய அதிகாரி கேட்டுக் கொள்கின்றார். (ஓ-4)

## புதிய நிர்வாக சபை தெரிவு

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண அமுத சுரபி அன்னதான சபைக்கு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக செ. பேரின்பநாதன், செயலாளராக நா. கிருஸ்ணபிள்ளை, பொருளாளராக வெ. சத்தியபாபு ஆகியோர் சபையினரால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஓ-36)

## வருடாந்த விளையாட்டு விழா

ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலைய அடைக்கலநாயகி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அடைக்கல நாயகி ஆலய மைதானத்தில் ஐக்கிய சனசமூக நிலையத் தலைவர் லி. லிங்கேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்வி பணிப்பாளர் வ. இராதாகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினர்களாக ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திருமதி. வ. நவலக்ஷ்மி, ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி பங்குத்தந்தை வணபிதா மௌலீஸ் அடிகளார், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய் பிரிவு தலைவர் இ. மயில்வாகனம், ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி முன்பள்ளித் தலைவர் யோ. யோண் சிங்கம், சனசமூக நிலைய உத்தியோகத்தர் கே. சி.சிவசோதி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-134)

# வாரம் ஒரு தகவல்

## கத்தியும் புத்தியும்

"எதற்கு சேர் கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?"

"இன்றைக்குக் காலையில் புத்தியைத் தீட்டுவதற்கு மறந்து விட்டேன். அவசரப்பட்டு ஒருவார்த்தை சொல்லி விட்டேன். அதன் பலன் தான் இப்பொழுது கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிறேன்."

"ஆத்திரப்பட்டு விபரீதமாக எந்த ஒரு முடிவுக்கும் வந்து விடாதீர்கள். எதுவாக இருந்தாலும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்."

"எந்தெந்தப் பிரச்சினைக்கு என்னென்ன பரிகாரம் என்று எனக்குத் தெரியும். இப்பொழுது எனக்கிருக்கும் பிரச்சினைக்கு இதுதான் பரிகாரம். ஒரு தடவைக்கு நான்கு தடவை நன்றாக யோசித்துத்தான் இந்த முடிபுக்கு வந்திருக்கிறேன்."

"இருந்தாலும்..."

"அதெல்லாம் இருக்கட்டும். கத்தியை விட நன்றாக வெட்டக் கூடியது வேறெதாவது இருக்கிறதா?"

"வைரம்தான்"

"சரி அதைவிட வலுவாக வெட்டக் கூடியது?"

"தண்ணீர் கடுமையான வேகத்தில் தண்ணீரை பீய்ச்சி அடித்தால் உறுதியான இரும்பும் கூட ஒரே நிமிடத்தில் உடைந்து இரண்டாகிவிடும். தங்கத்தால் வெட்ட முடியாததைக் கூட தண்ணீரால் வெட்டலாம்"

"அப்படியா?"

"ஆமாம். இப்பொழுதெல்லாம் மணிக்கு 2000 கிலோ மீற்றர் வேகத்தில் தண்ணீரை பீய்ச்ச முடியும்"

"தண்ணீருக்கு அவ்வளவு சக்தி உண்டா?"

"பின்னே இல்லையா... அதனால்தான் சொல்கிறேன் கத்தியைத் தீட்டாதீர்கள் என்று. எதுவாக இருந்தாலும் பேச்சு வார்த்தை மூலமாக தீர்த்துக் கொள்ளலாம். எழுந்து வாருங்கள் இப்படி! நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்."

"கேளுங்க்!"

"இன்று காலையில் அவசரப்பட்டு ஒருவார்த்தை சொன்னதாகவும் அதன் பலன்தான் இப்பொழுது கத்தியைத் தீட்டுவதாகவும் சொன்னீர்கள் அப்படி யாரிடம் சொன்னீர்கள்?"

"என் வீட்டுக் காரியிடம்"

"என்ன சொன்னீங்க"

"உன் கையால் மைசூர்ப்பாகு செய்து சாப்பிட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது என்று சொல்லிவிட்டேன். செய்து கொடுத்தா. கடித்துப் பார்த்தேன். முடியவில்லை. அதுதான் வெட்டவாவது முடியுமா என்று பார்க்க கத்தியைத் தீட்டுகிறேன்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகங்களில் (2010/2011) ஆண்டுக்குரிய உப ஆளுநர் பதவிக்கு யாழ். குடாநாட்டிலிருந்து லயன்ஸ் கழகங்களின் சார்பில் ஓர் பிரதிநிதியை நியமிப்பதற்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து லயன்ஸ் கழக உறுப்பினர்களும் தவறாது கலந்து கொண்டு ஆலோசனைகளையும் தெரிவையும் உறுதிப்படுத்துமாறு தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4)

## இராசி பலன்

16.08.2009
(ஆடி 31, ஞாயிற்றுக்கிழமை)
ஏகாதசி பின்னிரவு 1.56 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 5.27 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | வாக்கு மேன்மை, காரிய அனுகூலம், கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு. |
| இடபம் | மனஸ்தாபம், எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம், ரோகநிலை. |
| மிதுனம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம், முயற்சி கைகூடும். |
| கடகம் | பிதா சிந்தை, உணர்ச்சி வசப்படுதல், சயன சுகக்குறைவு, திடீர் பயணம். |
| சிங்கம் | மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், தனதானிய சேர்க்கை, கீர்த்தி. |
| கன்னி | தொழில் சிந்தை, சுபநிகழ்வு, முயற்சி கைகூடும், ஆரோக்கிய நிலை. |
| துலாம் | ஆன்றோர் மதிப்பு, புதிய திட்டமிடல், பயந்த சுபாவம், பிரயாணம். |
| விருச்சிகம் | எதிர்பாராத பகை, காரிய தாமதம், போசன சுகக் குறைவு, கௌரவக் குறைவு. |
| தனுசு | வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், உற்சாகம். |
| மகரம் | சுகவாழ்வு, திடீர்பயணம், முயற்சி கைகூடும், வாக்கு மேன்மை. |
| கும்பம் | காரிய இடையூறு, மனச்சஞ்சலம், தனவிரயம், போசன சுகக்குறைவு. |
| மீனம் | புதிய விடயம், விரும்பாத நட்பு, பயந்த சுபாவம், சுபசெலவு. |

வளவன்

## உறவின் பரிசு

முதுமை
உறவுகள் நெஞ்சில்
வலிகளை சுமக்கின்றது-வாரிசுகள்
வசந்தத்தில் மூழ்கின்றது

பாசங்கள்
பாடையேறும் வரையாவது
தொடரவில்லை
பாரினில் உறவுகள்
உணர்விழந்த பிணமானது

கெட்டவார்த்தைகள்
நெஞ்சை எரித்துப் போகின்றது
கெடுபிடிகளும் வம்சவேர்தனை
செக்கு மாடாக்கியது

கிழிந்த பாயும்
இருண்ட அறையும்
சொத்தானது
இங்கு கண்ணீரும்
வேதனையுமே நரகமானது

முயற்சிக்கு
முகவரி கொடுத்தார்கள்
இவர்கள் முதியவர்
இல்லத்துக்கு வழிகாட்டினார்கள்
இளையவர்கள்

வயதுகள்
முதிர்ந்தது வருடங்களால் அல்ல
உறவுகளின் வலிகளால்

ஜே. எஸ். ராஜ்
யாழ். பல்கலைக்கழகம்.

# ST.JOHN'S COLLEGE, JAFFNA.
# CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.

## ADMISSION -2010 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 10

## தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2010

01. அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2009 முதல் 15.09.2009 வரை பெற்றுக்கொள்ளலாம்.
ஆ) 15.09.2009க்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.
ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 22.09.2009 செவ்வாய்க்கிழமை. அத் திகதிக்குப் பின்னர் எமக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.

03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00

05. வயதெல்லைகள்:
அ) தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2004க்கும் 31.01.2005 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
ஆ) தரம் 06 விண்ணப்பதாரி 01.02.1999 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
இ) தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2001 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

06. தரம் 12(A/L) 2012 (Batch) விண்ப்பதாரி 01.02.1993 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

07. தரம் 04, தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 10.10.2009 சனிக்கிழமை காலை 9.0 0மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12இற்கும் (A/L) 2012 (Batch) தமிழ்/ஆங்கில மொழி மூலம் கற்பதற்கான விண்ணப்ப்படிவங்கள் சென்ஜோண்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கெள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 04.01.2010 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வகுப்புக்கள் 11.01.2010 ஆரம்பமாகும். ஆங்கிலமொழி மூல கற்கைநெறி விஞ்ஞான, கணித, வர்த்தக பாடங்களுக்கு நடைபெறும்.

03. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12(A/L) (தமிழ்/ஆங்கிலமொழி) மூலம்2012 (Batch) விண்ணப்பதாரிகள் (O/L) பரீட்சை பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

அதிபர்கள்.

(C-3038)


# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு



தோற்றம் 17 05 1944

மறைவு 19 07 2009

எம் குடும்பத்தலைவியாய் வாழ்ந்து
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எமது குடும்ப குல விளக்கு

## அமரர் தம்பிராசா நவமணி (நவம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 17.08.2009 அன்று அதிகாலை 6 மணிக்கு இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று இன்பர்சிட்டி சமுத்திரத்தில் அஸ்தி சஞ்சயனம் செய்யப்படும். அந்தி-யேட்டிக்கிரியைகளிலும் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணம் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு எமது அன்னையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மேலும் எமது அன்புத்தாயாரின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மற்றும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள், தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினருக்கும் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பணிப்பாளர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் ஓய்வுபெற்ற அதிபர்களான ஆ. வடிவேலு, ஆ. மகேசு (கற்கோவளம்) சகோதரர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்பர் சிட்டி
பருத்தித்துறை

இங்ஙனம்
குடும்பத்தினர்

(3240)


UNION ASSURANCE

# உடனடி வேலைவாய்ப்பு



இலங்கைக் காப்புறுதி வரலாற்றில் கடந்த 22 வருடங்களாகச் சிறப்பான வாடிக்கையாளர் சேவையினை வழங்கிவரும் "யூனியன் அஷ்யூரன்ஸ்" வடமராட்சி வாழ் மக்களுக்கு சிறப்பான சேவையினை வழங்குவதற்காக

## "வடமராட்சியில் தனது கிளையை ஆரம்பிக்கின்றது"

இதற்காக 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## பதவி வெற்றிடங்கள்

*1. காப்புறுதி ஆலோசகர் - தனி (வெற்றிப்பாதை I)*
*2. தனிநிதி ஆலோசகர் - தனி (வெற்றிப்பாதை I)*
*3. முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் - குழு (வெற்றிப்பாதை II)*
*4. உதவி அபிவிருத்தி முகாமையாளர் - குழு (வெற்றிப்பாதை II)*



தகுதி உடையவர்கள் தமது சிறப்பான வேலைச் செயற்திட்டத்தின் (Acheifment) மூலம் குறுகிய காலப்பகுதியில் பின்வருமாறு தமது பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளல



தனி வெற்றிப்பாதை I
- காப்புறுதி ஆலோசகர்
- தனி நிதி ஆலோசகர்
- நிதி ஆலோசகர்
- தனி நிதி முகாமையாளர்
- சிரேஷ்ட நிதிமுகாமையாளர்

குழு (Team Leader)
வெற்றிப்பாதை II
- முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- சிரேஷ்ட அபிவிருத்தி முகாமையாளர்

தகைமை-1. க.பொ.த(சா/த) 6 பாடங்கள் சித்தி (கணிதம் உட்பட -பதவி 1,2)
2. க.பொ.த(உ/த) 3 பாடங்கள் சித்தி (பதவி 3,4)

Note- I. வேறு துறையில் வேலைசெய்பவர்கள் or ஓய்வு பெற்றவர்கள் பகுதி நேரமாக (பதவி இல: 01 இல்) தொழில்புரிய முடியும்.
II. பரீட்சை எழுதும் A/L மாணவர்களுக்குரிய விசேட வேலை வாய்ப்பிற்கான விபரம் பரீட்சை முடிவடைந்ததன் பின்னர் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

நன்மைகள்-1. வரையறுக்கப்படாத ஊதியம்
2. திறமைக்கேற்ப விரைவான பதவி உயர்வு.
3. வருடாந்த விருதுகளை வெல்லும் வாய்ப்பு.
4. இலவச வெளிநாட்டுச் சுற்றுலா.
5. இலவச ஆயுட் காப்புறுதி வசதி.
6. காப்புறுதி நிறுவகத்தால்(SLII) நடாத்தப்படும் தொழிற்சான்றினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு

நேர்முகத் தேர்வு

காலம்:- 17.08.2009 திங்கட்கிழமை நேரம் :- முற்பகல் 9.30

இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ் ( இராகுலசூரியர் கட்டடத் தொகுதி) பிரதான வீதி, பருத்தித்துறை.(வேலாயுதம் மகாவித்தியாலயம் அருகில்)

**தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு சுயவிபரக் கோவையுடன் உறுதியான விடா முயற்சியினால் உங்கள் வெற்றிப்பாதையைத் தீர்மானியுங்கள்**

(3233)

தொடர்புகளுக்கு 021-222 3753
077 6564643

T. குபேந்திரன்
அபிவிருத்தி முகாமையாளர்

# விடுமுறை நாட்களிலும் பணம் பாதுகாப்பாக...




Spirit & Soul

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை இப்போது வருடத்தின் 365 தினங்களும் திறந்திருக்கிறது.


COMMERCIAL BANK

(சி-3023)

www.combank.lk



# அழகர் மலை



ஊரே தூற்றும் மகா குடிகாரர் ஆர்.கே.அவரது அண்ணன் நெப்போலியனோ ஊரே போற்றும் மகாநல்லவன். ஆர்.கே.வின் போதையால் அவரது அண்ணன் நெப்போலியன் ஊரார் முன் தலைகுனிய வேண்டிய ஒரு சூழல். அண்ணன் ஊரார் முன் மன்னிப்புக் கேட்டு மண்டியிடுவதைப் பார்த்த மறு வினாடி குடியை விடுகிறார் ஆர்.கே. அடுத்த நொடி நகரத்திலிருந்து அந்த ஊருக்கு வரும் பானுவைப் பார்க்கிறார்.அவர் மீது காதல் கொள்கிறார்.பானு சென்னைக்கு திரும்பு கிறார். அவரை திருமணம் செய்து கொண்டு தான் ஊர் திரும்புவேன் என சென்னை வருகிறார் ஆர்.கே. அவருக்கும் அவரது அண்ணன் நெப்ஸுக்கும் பொது வில்லன் லால். இதன் பிறகும் சும்மா இருப்பவரா? வில்லனை வெற்றிகொண்டு நாயகன்,நாயகியை கை பிடித்தாரா இல்லையா என்பது மீதிக்கதை.

இதனூடே வடிவேல் -சோனாவின் காதல் காமெடி . நெப்போலியன் -ரஞ்சிதாவின் பிளாஷ்பேக் காதல். நெப்ஸ் பிரதர்ஸ்-லால் இடையேயான பகை என்று பல விஷயங்களில் ஒன்று சேர்த்து அழகர் மலையை அழகுபடத் தந்திருக்கிறார்கள்.


முதலில் குடிகாரனாகவும் அதன் பொறுப்புணர்ந்த குடும்பஸ்தனாகவும் ,பானுவின் அன்புக் காதலானகவும் ஆர்.கே. அழகாகப் பொருந்தி நடித்திருகிறார். இவரது முதல் படமான எல்லாம் அவன் செயலைக் காட்டிலும் நடிப்பில் ஏகப்பட்ட முன்னேற்றம்.

தாமிரபரணி பானுவா இது? எனக் கேட்க வைத்து சபாஷ் பானு ! என சொல்லவைக்கிறார் நாயகி பானு ! நெப்போலியன், ரஞ்சிதா, வடிவேலு, சோனா வில்லன் லால், மணிவண்ணன் என சகலரும் தங்கள் பங்கை சரியாகச் செய்துள்ளனர்.

இளையராஜாவின் இசையும் பாடல்களும் ஏ.கார்த்திக்ராஜாவின் ஒளிப்பதிவும் எஸ்.பி. ராஜ்குமாரின் இயக்கத்தில் அழகர் மலையை அழகுமலையாக்கியுள்ளது.

*அழகர் மலை - சிலதபல குறைகள் இருந்தாலும் அழகு மலை.*

# தொடர் தோல்வி... விலகும் நயன்?




பிரபுதேவாவுடன் காதல். இரகசியத் திருமணம் என வேறு பாதையில் நயன்தாரா பயணிக்கத் தொடங்கி விட்ட தால் தான் அவருக்குத் தொடர்ந்து தோல்விப் படங் களாக அமைந்துவிட்டன என்று பெற்றோரும், சில மலையாள மந்திரவாதிகளும் பலமாகச் சொன்ன தால் இப்போது தன் உறவை மறுபரி சீலனை செய்து வருகிறாராம் நயன்தாரா.

கடந்த இருஆண்டுகளாகத் தொடர்ந்து தோல்விப் படங்களாகவே அமைந்துவிட்டன நயன்தாராவுக்கு.இன்று தமிழில் புதிய படங் களே அவருக்கு இல்லாத நிலை. சூரியா வுடன் நடிக்கும் ஆதவன் வெளியாகி விட்டால் பின்னர் முகட்டைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டி யது தான்.நம்பர் வன் நடிகையாக இருந்தவருக்கு ,இன்று இந்த மோச மான நிலைவரக் காரணமே பிரபுதேவாவுடன் ஏற்பட்ட காதல் தான் என்று நயன்தாரா வின் பெற்றோர் அறிவுறுத்தி வரு கிறார்களாம்.

தங்களுக்குத் தெரிந்த மாந்திரிகர்களை வைத்துப் பார்த்ததில், நயன் இப்போ தைக்கு விலகி இருப்பதுதான் நல்லது என சொன்னார்களாம்.

# சோனியா-செல்வா விவாகரத்து



நடிகை சோனியா அகர்வால் -இயக்குநர் செல்வராகவன் ஆகியோர், பரஸ்பர விவாகரத்துக் கோரி குடும்ப நல நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர். சினிமா இயக்குநர் கஸ்தூரிராஜாவின் மூத்தமகன் செல்வராகவன். இவர் "காதல் கொண்டேன்" படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குநராக அறிமுகம் ஆனார்.

"7ஜி ரெயின்போ காலனி", "புதுப்பேட்டை" படங்களை இயக்கியுள்ள இவர், தற்போது "ஆயிரத்தில் ஒருவன் படத்தை இயக்கி வருகிறார். "காதல் கொண்டேன்" படத்தின் கதாநாயகனாக தனுஷ், கதாநாயகியாக சோனியா அகர்வாலை இயக்குநர் செல்வ ராகவன் நடிக்க வைத்தார். படம் வெற்றிப்படமாக அமைந்தது. இதனால் செல்வராகவன் ஆலோச னைகளைக் கேட்டு, சோனியா அகர்வால் புதிய படங்களில் நடித்து வந்தார்.

"காதல் கொண்டேன்" படத்தில் நடித்ததிலிருந்தே இவருக்கும் இயக்குநர் செல்வ ராகவனுக்கும் காதல் என்று பரபரப்பாக ஹொலிவூட்டில் பேசப்பட்டது. பிறகு இருவரும் காதலிப்பதை ஒப்புக்கொண்டனர்.

செல்வராகவனின் குடும்பத்தினரும் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சோனியா அகர் வாலின் பெற்றோரும் இவர்களின் காதலுக்கு சம்மதம் தெரிவிக்க 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருமணம் செய்துகொண்டனர். இருந்தாலும் இருவருக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது. இதற்கு செல்வராகவனுக்கும் நடிகை ஆன்ட்ரியாவுக்கும் உள்ள நெருக்கம் தான் காரணம் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் இயக்குநர் செல்வராகவனும், சோனியா அகர்வாலும் சென்னை ஊயர்நீதி மன்ற வளாகத்தில் உள்ள குடும்பநல நீதிமன்றில் பரஸ்பர விவாகரத்துக்கோரி மனுத் தாக்கல் செய்தனர். இம்மனு 6 மாதங்களுக்குப் பின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# ஸ்ரீதேவி மகளும் நாயகி ஆகிறார்



எண்பதுகளில் தமிழ் இரசிகர்களின் கனவுக் கன்னியாகத் திகழ்ந்தவர் நடிகை ஸ்ரீதேவி. மூன்று முடிச்சு, 16 வயதினிலே, பிரியா, வாழ்வே மாயம், மூன்றாம் பிறை, சிவப்புரோஜாக்கள் உள்ளிட்ட பல சுப்பர்ஹிட் படங்கள் நடித்துள்ளார்.

ஹொலிவூட்டில் இருந்து பொலிவூட்டுக்குச் சென்ற ஸ்ரீதேவி இந்தியிலும் பல வெற்றிப் படங்களில் நடித்துள்ளார். ஸ்ரீதேவிக்கு இரண்டு மகள்கள். இதில் மூத்தமகள் ஜானவி நடிகையாகிறார். நாகர்ஜுனாவின் இளைய மகன் அகில் அக்சினேனிக்கு ஜானவியை ஜோடியாக்க ஸ்ரீதேவி முடிவு செய்துள்ளார்.

ஜானவி முகத்தில் குழந்தைத்தனம் தெரிகிறது. ஓரிரு வருடத்தில் இளம் பெண் ணாக மாறிவிடுவார். அதன் பின் இருவரையும் ஜோடி சேர்த்து நடிக்க வைக்க முடிபு செய்துள்ளனர். இதற்காக மகளுக்கு நடனம் , நடிப்பு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்து வருகிறார். கதையும் கேட்டு வருகிறார் ஸ்ரீதேவி. சமீபத்தில் நடிகை ராதா தனது மகளை தெலுங்குப் படத்தில் கதாநாயகியாக அறிமுகம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போட்டிகள் சகஜம் தான் -அசின்



இந்தி கஜினி மூலம் பொலிவூட்டில் கொடி நாட்டி யிருப்பவர் நடிகை அசின். தற்போது அவர் சல்மான் கானுடன் லண்டன் ட்ரீம்ஸ் படத்தில் நடித்து வரு கிறார். இப்படம் ரிலீசானதும் பொலிவூட்டில் நம்பர் வன் இடத்தை அசின் பிடிப்பார் என்று இந்திப் பட உலகில் தேர்ச்சி நிலவுகிறது. அசினின் இந்த அபார வளர்ச்சியால் தங் களது மார்க்கெற் சரிந்து விட்டதாக பொலி வூட்டின் மற்ற முன்னணி நடிகைகள் கருதுகிறார்களாம்.

இதனால் அவரது வளர்ச்சியைத் தடுக்க மறைமுக சதிவேலை களிலும் அவர்கள் ஈடுபட்டு வரு தாகவும் தகவல்கள் கசிந்துள் ள்ன. இதுபற்றி அசினிடம் கேட்டால் இந்தித் திரையுலகில் இவ்வளவு பிரபலமாவேன் என்று எதிர்பார்க்கவில்லை. இங்கு ஓய்வே இல்லாமல் நடித் துக்கொண்டிருக்கிறேன்.

இந்தி நடிகைகள் என்னை போட்டியாக நினைக்கிறார்கள். சினிமாத் தொழிலில் இது போன்ற போட்டிகள் சகஜம் தான் என்றார்.

# புலமைப்பரிசில் முன்னோடிப்பரீட்சை ஓகஸ்ட் -2009

ஆசிரியர் T.மன்மதகாந்தன்

ஆசிரியர் T.திலீப்குமார் கொழும்பு


**வினா இலக்கம் (15)**

நேரம் :-1மணி 15 நிமிடம்

01 தொடக்கம் 32 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கோடிடுக.


1,2 ஆகிய வினாக்களில் தொடர்பற்ற உருக்களைக் கொண்ட அடைப்பைத் தெரிவு செய்க. ;

01.



1 2 3 4

02.



1 2 3 4

03. ஒரு வேலையை மனமின்றிச் செய்தல் என்பதனை விளக்கும் மரபுத் தொடர்

1) கல்லில் நார் உரித்தல் 2) நுனிப் புல் மேய்தல்
2) கடன் கழித்தல் 3) எடுத்தெறிதல்


04. கிடைப்பதைக் கொண்டு திருப்தியடையாமையைக் குறிக்கும் பழமொழி

1) போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
2) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
3) இட்டுக்கெட்டார் எங்குமில்லை
4) பேராசை பெருநட்டம்

05. ஒருவர் சோகமடைந்த சந்தர்ப்பத்தை காட்டுவதற்கு உகந்த உவமானமாக அமையாதது.


1) சூரியனைக் கண்ட தாமரை போல
2) சந்திரனைக் கண்ட தாமரை போல
3) மழையில்லாமல் வாடிய செடி போல
4) தாய்ப் பசுவைக் காணாத கன்றைப் போல

06. எழுத்துப் பொறிமுறையை அனுசரித்து எழுதும் போது எழுது கோலைப் பிடிக்கும் சரியான முறை.



1) 2) 3) 4)

07. வாசிப்பின் போது புத்தகத்தை சரியாகப் பிடிக்கும் முறை.



1) 2) 3) 4)

40 மாணவர்கள் கொண்ட வகுப்பொன்றில் 32 பேர் கிரிக்கெட்டையும் 30 பேர் உதைபந்தாட்டத்தையும் விரும்புகின்றார்கள். இத் தரவுகளின்படி.

08. இரண்டு விளையாட்டுக்களையும் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?

1) 22 பேர் 2) 52 பேர் 3) 40 பேர் 4) 12 பேர்

09. உதைப்பந்தாட்டத்தை மட்டும் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?

1) 8பேர் 2) 10 பேர் 3) 18 பேர் 4) 30 பேர்

பின்வரும் பாடலை வாசிக்க.

நிலத்தோடு முட்டி மண்ணை
வாரிக் கொண்டு வந்த கடல்
நீரில் மூழ்கி முத்தெடுத்து கொடுத்தது
கடல்க் குதிரை

10. இப் பாடலில் குறிப்பிடப்படும் பிராணி யாது?




1) 2) 3) 4)

11. சந்தோஷ் மூன்று மாபிள்களையும் இரண்டு பந்துகளையும் வாங்கக் கூடிய பணம் வைத்திருந்தான் அல்லது அவனுடைய பணத்தில் மூன்று பந்துகள் மட்டும் வாங்கலாம். அவன் ஒரு பந்தை மட்டும் வாங்கினால் மீதிப்பணத்திற்கு எத்தனை மாபிள்கள்வாங்கலாம்?


1) 2 2) 3 3) 6 4) 9

12. நீர்மட்டம் செங்கோணங்களைக் காட்டும் உரு எது?




1) 2) 3) 4)

13. உருவைப் பார்க்க வெற்றிடத்திற்கு பொருத்தமான உருவைத்தெரிவு செய்க?



1) 2) 3) 4)

14. சதுரவடிவத்தாள் ஒன்றை சமச்சீராக இரண்டு தடவை மடித்து புள்ளிக் கோட்டின் வழியே வெட்டினால் பெறப்படும் உருவத்தை தெரிவு செய்க.



1) 2) 3) 4)

15. சதுரமுகி ஒன்று செய்வதற்காக தடித்த அட்டையில் வெட்டப்பட்ட உருவில் கீழ்வருமாறு ஆங்கி எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளது.




இவ் அட்டையினால் செய்யப்பட்ட சதுரமுகியினைத் தெரிவு செய்க.




1) 2) 3) 4)

16. ராஸிக் சமனிலும் 8 வருடங்கள் வயதில் கூடியவன்; ஏழு ஆண்டுகளின் பின் ராஸிக்கின் வயது சமனின் வயதின் இரண்டு மடங்காகும். ராஸிக்கினதும் சமனினதும் தற்போதைய வயது முறையே

1) 2,10 2) 10,2 3) 9,1 4) 1,9


17. பின்வருவனவற்றில் துவிச்சக்கர வண்டியின் பாகங்கள் குறிக்கும் இலக்கங்களை மட்டும் கொண்ட விடையைத் தெரிவு செய்க.



(1) (2) (3) (4) (5) (6)

1) 3,1,2,4 2) 5,2,3,4 3) 4,3,2,6 4) 2,6,3,1


18. பின்வரும் விலங்குகளில் உறுப்புக்களில் மாட்டின் உறுப்புக்களை கொண்ட இலக்கங்களைத் தெரிவு செய்க.




(1) (2) (3) (4) (5) (6)

1) 3,1,2,4 2) 1,2,3,4 3) 4,3,5,6 4) 2,4,3,1

◆ புத்தகம் ,பேனா,அழிறப்பர் ஆகியவற்றை பைகளில் இட்டு விலை குறிக்கப்பட்டுள்ளது





19.



இப்பையின் விலை யாது?

1) ரூபாய் 21.50 2) ரூபாய் 18.50
3) ரூபாய் 24.50 4) ரூபாய் 27.50

20.



இப்பைக்கெற்றின் விலை என்ன?

1) ரூபாய் 30.50 2) ரூபாய் 35.50
3) ரூபாய் 34.50 4) ரூபாய் 36.50

21. மூன்று தவணைப் பரீட்சைகளிலும் ஹரீஸ் பெற்ற சராசரி புள்ளிகள் 72 ஆகும். முதலாம் மூன்றாம் தவணைப்பரீட்சைகளில் முறையே 70, 80 புள்ளிகளை அவன் பெற்றிருந்தான் எனின் இரண்டாம் தவணை அவன் பெற்ற புள்ளி யாது?

1) 70 2) 60 3) 58 4) 66

22. மழை நாட்களில் மின்னலைத் தொடர்ந்து இடியும் முழங்குகின்றது இதன் காரணம்.

1) மின்னலுக்குப் பின் சில விநாடிகளில் இடியும் ஆரம்பிக்கின்றது.
2) இடியும் மின்னலும் ஒன்றாக நிகழ்கின்றன
3) ஒலியின் வேகத்தை விட ஒளியின் வேகம் விரைவானது
4) ஒளியின் வேகத்தை விட ஒலியின் வேகம் விரைவானது

இந்நாட்காட்டியை அவதானித்து 23, 24 ஆகிய வினாக்களிற்கு விடை தருக?

| Mon | Tue | wed | Thu | Fri | Sat | Sun |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

23. இந்நாட்காட்டி எந்த மாதத்திற்குரியதாக இருக்கும்
1) ஜனவரி 2) பெப்ரவரி 3) யூன் 4) ஆகஸ்ட்

24. இம்மாதத்தில் பாடசாலை நாட்கள் எத்தனை?
1) 22 நாட்கள் 2) 24 நாட்கள் 3) 26 நாட்கள் 4) 30 நாட்கள்


**சேகர் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கி 40m சென்று பின் இடப்பக்கம் திரும்பி 25m சென்று பின் இடப்பக்கம் திரும்பி 75 m சென்று நண்பனின் வீட்டை அடைந்தான். அதனை ஆதாரமாகக் கொண்டு 25 ம், 26ம் வினாக்க ளுக் குரிய விடையின் கீழ்க் கோடிடுக.**

25. சேகரின் வீடு நண்பனின் வீட்டிற்கு எத்திசையில் உள்ளது.
1) ஈசான மூலை 2) அக்கினி மூலை 3) நிருதி மூலை 4) வாயு மூலை

26. சேகர் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு நண்பனின் வீட்டிற்குச் சென்று திரும்பிவர எடுக்கும் தூரம் எவ்வளவு?
1) 280m 2) 140m 3) 270m 4) 240m


**27ஆம் , 28ம் ஆகிய வினாக்களில் இரு நிகழ்ச்சிகளின் 5 சந்தர்ப்பங்களுக் குரிய உருக்கள் ஒழுங்கு வரிசை மாற்றப்பட்டு A,B,C,D,E என தரப்பட்டுள்ளது. அவ்வுருக்களில் காணப்படும் நிகழ்ச்சிகளின் சரியான ஒழுங்கு வரிசை இடம் பெறும் விடையைத் தெரிவு செய்க.**

27 .வித்து முளைத்து தாவரமாதல்





1) D,A,B,C,E 2) D,A,C,B,E 3) A,C,B,E,D 4) E,B,C,A,D

28. வயல் உழுது பயிர் செய்து பொலிதூற்றுதல்.




1) C,B,D,E,A 2) C,B,A,D,E 3) C,B,D,A,E 4) C,E,D,B,A

**குடும்ப உறவுகளைக் குறிக்கும் படம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை அடிப்படை யாகக் கொண்டு 29ஆம், 30ஆம் வினாக்களிற்கு சரியான விடையின் கீழ்க் கீறிடு.**




29. கந்தசாமி பார்வதி தம்பதிகளின் மருமகள் யார்?
1) கலா 2)துர்க்கா 3) சிவானி 4) விமல்

30. லோசன் சீவானிக்கு என்ன உறவு?
1) மருமகன் 2) மைத்துனன் 3) மாமன் 4) சகோதரன்


**31 தொடக்கம் 32 வரையுள்ள வினாக்களுக்கு கீழ் வரும் அட்டவணையில் உள் ளவாறு எழுத்துக்களையும் ரகசிய குறியீடுகளையும் பயன்படுத்தி விடையளிக்குக.**

| தமிழ் எழுத்துக்கள் | இரகசியஎண் பெறுமானம் |
|---|---|
| உயிர் குறில் எழுத்துக்கள் | 5 |
| உயிர் நெடில் எழுத்துக்கள் | 6 |
| மெய் எழுத்துக்கள் | 3 |
| உயிர் மெய் எழுத்துக்கள் | 4 |

31. அன்னம் என்ற சொல்லின் இரகசிய எண்?
1. 5 6 3 4 2. 5 3 4 3 3. 5 4 3 3 4. 5 4 3 4

32. 6 4 4 3 என்ற இரகசிய எண் குறிக்கும் செல்
1. ஆதவன் 2. இன்பம் 3. ஒப்பம் 4. ஏக்கம்

◆ கீதா, சீதா, மீனா ஆகிய மூவர் தமது நண்பர் வீட்டுக்குச் சென்ற பாதையை வரிப்படம் காட்டுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு 33ஆம், 34ஆம் வினாக்களுக்கு விடை தருக.




33. அதிக தூரம் சென்றவர் யார் ?
.................................................

34. குறைந்த தடவை இடப்பக்கம் திரும்பியவர் யார்?
.................................................

◆ **35ஆம் 36ஆம் ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடும் வியத்தை எழுதுக**

35. முதல் எழுத்து வேட்டியில் உண்டு போட்டியில் இல்லை
இரண்டாம் எழுத்து கும்பியில் உண்டு குப்பியில் இல்லை
மூன்றாம் எழுத்து புழுக்கத்தில் உண்டு பழக்கத்தில் இல்லை.
(.................................)

36. முதல் எழுத்து முகத்தில் உண்டு முறத்தில் இல்லை
இரண்டாம் எழுத்து முடியில் உண்டு முனையில் இல்லை
மூன்றாம் எழுத்து தண்ணீரில் உண்டு கண்ணீரில் இல்லை.
நான்காம் எழுத்து வம்சத்தில் உண்டு வாசத்தில் இல்லை.
(.................................)

**37ஆம், 38ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்படும் விடயத்தை எழுதுக.**

37. நான் காய்ந்த இலை தடிகளை மண்ணோடு மண்ணாக்குவேன் மரங்களிலும் சுவர்களிலும் மண்ணால் செய்யப்பட்ட சுரங்கப்பாதையின் வழியே போக்குவரத்துச் செய்வேன். பாம்புகளுக்கு இருப்பிடத்தை வழங்குவேன் மனிதர்களின் சொத்துக்களையும் நாசமாக்குவேன் மழை காலம் வந்து விட்டால் என் இருப்பிடமே அழிந்து விடும். நான் யார்?
(.................................)

38. நான் எம் இனத்தவர்களில் மிகப் பெரிய கண்களை உடையவன் எனது ஒலியை மனிதர்கள் விரும்புவதில்லை. எனது தோற்றத்தைக் கண்டு குழந்தைகள் அஞ்சுவார்கள். மரப் பொந்துகளில் வாழ்வேன். விவசாயிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சி புழுக்களை உண்பேன் இரவு வேளைகளில் நடமாடுவேன். நான் யார் ?
(.................................)

◆ **பின்வரும் பாடலைக் கொண்டு 39ஆம் ,40ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

*பாலைப் போல நிலவு வானில்*
*பவனிவரப் போகுது*
*கோலக்கடல் அலக்கை தட்டிக்*
*குதூகலிக்கப் போகுது.*
*நீல வானும் கண்சிமிட்டி*
*நின்று பார்க்கப் போகுது*
*மாலை வேளை மலர்ந்து கங்குல்*
*மங்கை................போகிறாள்*

39 1) குதூகலிக்கப் போவது யார்?
(.................................)

2) நீலவானம் என்பதைப் பிரித்து எழுதுக.
(.................................)

40. 1) இப்பாடலில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதுக?
(.................................)

2) கங்குல் என்னும் சொல்லின் இரண்டு ஒத்தகருத்துச் சொல் எழுதுக?
(.................................)(.................................)

அன்பு மாணவர்களே!
இவ் வினாத்தாள் தொடர்பான தெளிவின்மைகளை நிவர்த்தி செய்ய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு விளக்கங்களைப் பெற முடியும்.

ஆசிரியர் T.மன்மதகாந்தன் T.P 0714449245

ஆசிரியர் T.திலீப்குமார் T.P 071 4449447

# நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள 30 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள 30 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பினை வழங்கி அதன்மூலம் நிரந்தரமான வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க ஊழியர் நல்லுறவு மற்றும் மனிதவள அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்தகால யுத்த சூழ்நிலை காரணமாக இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவிகளை வழங்கி சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் தேவையான நாளாந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ள வழியேற்படுத்தவே அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

இவ்வருட இறுதிக்குள் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக அமைச்சின் செயலாளர் மகிந்த மதிகவெல தெரிவித்துள்ளார்.

(ஓ-6)

# மண்டலாபிஷேகப் பெருவிழா காண வாரீர்



அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம் என்பதற்கிணங்க சக்தி உபாசகராக விளங்கும் வைத்திலிங்கம் சிவராசாவின் அறப்பணி -திருப்பணி கைங்கரியத்தினால் தென்மராட்சி நகரத்திலே வாரிவனேஸ்வரம் எனும் சைவமும் தமிழும் தளைத்தோங்கிவரும் அமிர்த பாசினி உடலுறை சந்திரசேகரப் பெருமான் (வாரிவன நாத சிவன் ஆலயம்) உறைந்தருளும் திருநகரில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் ஆலயத்தை தமிழகக் கலைஞர்களையும் ஈழத்து கலைஞர்களையும் இணைத்து சிறப்புற அமைத்து கலைக்கோவிலாக மிளிர வைத்து ஆலய முகப்பில் கம்பீரமான பஞ்சதள இராஜ கோபுரத்தையும் அமைத்து 2008 (27.08.2008) இல் மகா கும்பாபிஷேகம் பெருவிழாவை நிறைவேற்றி வைத்தார்.

தொடர்ந்து ஓராண்டு நிறைவிலே ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் ஆலயத்தில் ஸ்ரீ மகாகாளி அம்பாளுக்கு ஒரு அழகிய திருக்கோவிலை அமைத்து தமிழகத்திலிருந்து எட்டு அடி உயரத்தில் பத்துக்கரங்களோடு கூடிய எழில் விஞ்சும் மாகாளி அம்பாளின் திருவிக்கிரகத்தை வருவித்து பிரதிஷ்டை செய்து 04.07.2009 அன்று ஸ்ரீ மாகாளி அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைத்தார்.

ஆலயத்தில் ஸ்ரீ முத்து மாரியம்பாளுடன் உடனுறைந்தருளும் ஸ்ரீ மாகாளி மிகவும் லாவண்யமான தோற்றத்தோடு காட்சிதருகின்றாள்.

துர்க்கையின் முகத்திலிருந்து பகுதியம்சமாக சும்ப நிசும்பர்களின் பெரும் போராட்டத்தின் போது தோன்றியவள். தேஜஸினாலும் குணத்தினாலும துர்க்கா தேவிக்கு சமதையானவள் மிகவும் வலிமை மிக்கவள் சகல சக்திகளும் கொடுப்பவள். கிருஷ்ணரிடம் பக்தி கொண்டவள். அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கினையும் விரும்புபவர்களால் ஆராதிக்கப்படுபவள். வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் கொடுத்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்விப்பவளாக ஸ்ரீ மாகாளி என்ற வடிவத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கின்றாள்.

இத்தகு தெய்வீக நலமருளும் அன்னையாக விளங்கும் அற்புத பெருக்கமும் ஸ்ரீ மாகாளியம்பாளின் மண்ட லாபிஷேகம் பெருவிழாவில் அனைவரும் கலந்து அவளருளுக்கு பாத்திரமாகி பணிந்து வாழ்வோமாக.

"ஸ்ரீ மாகாளியைப் பணிவோம்
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்"

மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்


# பாராட்டி வாழ்த்துகிறோம்

இலங்கை போக்குவரத்துச் சபையில் கடந்த 40 வருடங்களாக கடமை புரிந்து நாளை (17.08.2009) ஓய்வு பெறும் எங்கள் தாத்தா

**திரு சி. தெய்வேந்திரன்**

விசாரணை அதிகாரி (வடமாகாணம்) அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்




எங்களை பாசமுடன் வளர்க்கும் எங்கள் தாத்தா ஓய்வு பெற்றவுடன் எம்மை பாடசாலை கூட்டிச் சென்று கூட்டிவர தாத்தாவிற்கு உடல் ஆரோக்கியத்தைக் கொடுக்கவேண்டும் என்று எங்கள் குல தெய்வமான இமையாணன் காளி ஆத்தாவை வேண்டுகின்றோம்.

அன்புடன்
பேரப்பிள்ளைகள், கேதாரணி,
சாத்வீகன், மிதுரிகா.

(3237)


# நல்லூரான் திருவடிக்கு இன்று தங்கரதத் திருவிழா



இன்று திருப்புகழ் இசையுடன் சுவாமி
உள்வீதி வலம் வருவார்

## நல்லூரான் வருகிறான்

அழகன் முருகன் அலங்காரச் சிறப்புயர
அருளாள வருகிறான் தங்கரதம் மீதிலே
பளுவாக அழுத்தம் பாவச்சுமை இறக்க
பரன்மகன் வருகிறான் தங்கரதம் மீதிலே
அழுது தொழுவாரை தேற்றி ஆதரிக்க
ஆறுமுகன் வருகிறான் தங்கரதம் மீதிலே
நிழலாகி நின்று விழுதாகித் தாங்க
நல்லூரான் வருகிறான் தங்கரதம் மீதிலே

அல்வாயூர் சி. சிவநேசன்

## தங்கரத மூர்பவனே சாற்று

குன்றைப் பிளந்த குமரன் திருக்கைவே
லொன்றே உலகினுக் காதாரம் - என்றிருக்க
எங்கள் தமிழினத்தின் ஏக்கம் சரியாமோ
தங்கரத மூர்பவனே சாற்று

சூரனைக் கொன்று சுரர் துன்பம் போக்கியவெம்
பேராளா செவ்வேற் பெம்மானே - யாருடைய
ஆதர வேதுமற்று அஞ்சிப் புலம்பிடுமெம்
வேதனையை மாற்றியருள் வீர்

சி. வெற்றிவேலு - வட்டுக்கோட்டை

## நல்லூரா ; துணை வா!

கவலைகள் போக்கி - வந்த
கலக்கங்கள் நீக்கி
விடிவினைத் தூக்கி - புது
வாழ்வினை ஆக்கி
நல்லூரா துணை வா!

இ. கோபிகா - தென்புலோலியூர்

## நல்லூரான் திருவடியை நாடு

நல்லூரான் திருவடியை
நாடித்துதித்து நிற்க
பொல்லா வினை யாவும்
பொசுங்கிப் போய் விடும்
மருளா மனம் நோய்
அணுகாது காத்திடும்
நிலையான நிமலனை
நித்தமும் பணிந்திடவே!

குப்பிளான் - செ. ரவிசாந்


தங்கரதத்தில் பவனி வரும் தங்கவேல் முருகா!
தஞ்சமடைந்தோம் தரிசனம் தந்தருள் கந்தா!



**தில்லையம்பலம் அன் சன்ஸ்**
**உழவு இயந்திர விற்பனை நிலையம்**
நவாலி அரசடிச் சந்தி,
மானிப்பாய்.

# காலநிலை மாற்றத்தால் யாழ் குடாநாடு எதிர்கொள்ளவிருக்கும் சவால்கள்!

பல வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் காலநிலை மாற்றம் பற்றி குறிப்பிட்ட சில அறிவியலாளர்கள் அல்லது காலநிலை அவதானிகளால் பேசப்பட்டு வந்த காலநிலை மாற்றம் என்பது தற்போது அனைத்துத் தரப்பினராலும் பேசப்படும் ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பல்வேறு பாதிப்புக்கள்



மனிதனின் சுகதேகியான வாழ்க்கை முறையைக் கேள்விக் குறியாக்கியமையே இவ்வாறு பலரும் அக்கறை செலுத்துவதற்குக் காரணமாக அமைந்தது. அண்மைக்காலத்தில் யாழ். குடாநாட்டிலும் கூட பல்வேறு அசாதாரண மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது அனைவரும் அறிந்த விடயம்.

அதாவது பருவம் தப்பிய மழை வீழ்ச்சி, அதிக வெப்பநிலை, கடும் வரட்சி என்பன இவற்றுள் முக்கிய மாற்றங்களாகும். இதே போன்று எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என்பதனால் காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வும் அக்கறையும் சமூகங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இவை இன்னமும் பல பாமர மக்களுக்கு எட்டாத ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறுகிய சில காலப்பகுதிகளில், வானிலை அம்சங்களான மழைவீழ்ச்சி, வெப்பநிலை, அமுக்கம், ஈரப்பதன், காற்று போன்ற பல்வேறு வளிமண்டல மூலங்களில் ஏற்படும் மாற்றம் வானிலை மாற்றம் என்று குறிப்பிடப்படுகின்றது.

ஆனால் காலநிலை மாற்றம் என்பது மேற்குறிப்பிட்ட காரணிகளின் நீண்டகால மாற்றத்தினைக் குறிக்கும். மேற்குறித்த வானிலை அம்சங்களில் ஏதாவது ஒன்றின் அதிகரிப்போ அல்லது குறைவடைதலோ இன்னொன்றினது அதிகரிப்புக்கோ அல்லது வீழ்ச்சிக்கோ காரணமாக அமையலாம். ஏனெனில் இவை ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவை.

இவ்வாறு தோற்றம் பெறும் பாதிப்புக்கள் மூன்று காரணிகளில் தாக்கத்தைச் செலுத்தும்.

- ♦ பௌதீக ரீதியான பாதிப்பு
- ♦ பொருளாதார ரீதியான பாதிப்பு
- ♦ சமூக ரீதியான பாதிப்பு

என்பவையே அவையாகும். இவற்றுள் பௌதீக ரீதியான பாதிப்புக்களை அல்லது மாற்றங்களை எடுத்து நோக்கும் போது

- ♦ பருவமழை காலம் தாழ்த்துதல்
- ♦ கிணற்று நீர்மட்டம் குறைதல்
- ♦ கடற்கரையோர மணல் அகழ்வு காரணமாக கடல் நீர் தரையை உள்வாங்குதல் அதிகமாதல்
- ♦ நன்னீர் உவர்நீராதல்
- ♦ புயல் அனர்த்தம்
- ♦ வெள்ளப் பெருக்கு
- ♦ கடல் மட்டம் உயர்தல்
- ♦ பனிமலைகள் உருகுதல்
- ♦ விவசாய மண்வளம் குறைதல்
- ♦ அதிக வெப்பநிலை

போன்றவற்றை பாரிய மாற்றங்களாகக் குறிப்பிட முடியும்.

பொருளாதார ரீதியான பாதிப்புக்கள்/மாற்றங்களை குறிப்பிடும் போது பல பயிர்கள் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் அத்துடன் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் இயற்கை அழிவுகளாலும் பயிர்கள் பாதிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

கோதுமை, சோளம், நெல் போன்ற பிரதான தானியப் பயிர்கள் அதிகரித்த வெப்பநிலையைத் தாங்க முடியாமல் அழிவடையக் கூடும். அத்துடன் போதிய நீர், சூரிய வெளிச்சம் இல்லாமையாலும் பயிர்கள் பாதிக்கப்படும். இதனால் உலகில் தானிய நெருக்கடி ஏற்படும். உலகில் 43% மாணவர்கள் இதனால் பாதிக்கப்படுவர் என ஐ.பி.சி.சி. எதிர்வு கூறியுள்ளது.

மேலும் விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாக மாற்றம் பெறும் பல விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் அற்றுப் போகும். அண்மையில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட தானிய நெருக்கடிக்கு காலநிலை மாற்றமே பிரதான காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதே போன்று சமூகரீதியான பாதிப்புக்கள் அல்லது மாற்றங்களை எடுத்து நோக்கும்போது மனித சமூகத்திற்கு புதிய வகையான நோய்கள் தோன்றும் வாய்ப்புண்டு. வெப்பநிலை அதிகரிப்பினால் மனிதனுக்கு தோல், கண் மற்றும் உளவியல் சார்ந்த நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. அத்துடன் மனிதனிற்கு தோல் வெளிறல், முடியுதிர்தல் போன்ற நோய் களும் ஏற்படும். ஏற்படும் வெப்பம் காரணமாக மனித நடமாட்டம் மட் டுப்படுத்தப்படும்.

காலநிலை மாற்றப் பாதிப்புக்கள் தொடர்பாக ஓர் அறிவியலாளர் குறிப்பிடுகையில் "இவ்வாறு தொடரும் காலநிலை மாற்றத்தால் சுமார் 500 வருடங்களில் பூமியில் மனிதன் மட்டுமன்றி ஏனைய உயிரினங்களும் வாழ முடியாது போய்விடும்" எனக் கூறுகின்றார்.

காலநிலை மாற்றத்தினால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படலாம் நிலப்பகுதிகளில் உள்ள பனிச் சிகரங்கள் வேகமாக உருகி வருகின்றன. ஆபிரிக்காவில் உள்ள கிளிமஞ்சாரோமலை இன்னும் 15 ஆண்டு களில் மறைந்துவிடலாம். அந்தாட்டிக்கா வில் உள்ள "லார் சன்" பனியடுக்கில் 1250 சதுர மைல் பரப்புள்ள பகுதி 2002 ஆம் ஆண்டில் உடைய ஆரம்பித் தமை உலகின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்துள்ளது.

தற்போது பனிப்படலங்கள் 9% உருகி வருகின்றது எனக் கூறப்படுகிறது. உலகின் காடுகளில் 2.5% மட்டும் எஞ்சியுள்ளன. எனினும் இவையும் அதிகரித்து வரும் வெப்பம் காரணமாக தற்போது படிப்படியாக அழிவடைந்து வருகின்றது.

உலகளாவிய ரீதியில் பாதிப்புக்கள் தொடர்பாகச் சிந்திக்கும் அதே நேரம் நாம் வாழும் பூர்விக பூமியான யாழ். குடாநாட்டின் பாதிப் புக்கள் தொடர்பாகவும் சிந்திக்க வேண்டும்.

1940களிலிருந்து இன்று வரை ஆண்டு தோறும் கிடைக்கும் மழை வீழ்ச்சியின் அளவு குறைவடைந்து வருகின்றது. அந்த வகையில் 2004 ஆம் ஆண்டு 1869.5 mm உம் 2005 இல் 1235.3mm உம் 2006 இல் 926.5 mm மழைவீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழைவீழ்ச்சி, வெப்பநிலை போன்றவற்றின் பருவ காலங்களும் மாற்றமடைந்து செல்கின்றது. இதே போன்று குடாநாட்டு வெப்ப நிலையிலும் பல்வேறு மாற்றங்களை அவதானிக்கக் கூடிய தாகவுள்ளது.

மேற்படி வெப்ப அதிகரிப்பும், மழைவீழ்ச்சிக்குறைவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகமான பாதிப்பினை விவசாயச் செய்கையில் ஏற்படுத்தப் போகின்றது.

இதனைவிட எதிர் காலத்தில் காலநிலை மாற்றத்தினால் கடல் நீர் மட்டம் உயர்வடையுமானால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வட மேற்கே உள்ள தீவுகள் குறிப்பாக எழுவைதீவு, பருத்தித்தீவு, நயினாதீவு, கச்சதீவு போன்ற தீவுகள் கடலில் மூழ்கும் அபாயம் உண்டு. இத்தீவுகளில் பல தீவுகள், இதனைவிட யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில கடற்கரைப் பகுதிகள் நீரில் மூழ்கும் வாய்ப்புண்டு.

இவ்வாறான நிலை தவிர்க்கப்பட வேண்டுமாயின் காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வு சகல மக்களுக்கும் அவசியமாகின்றது.

ஆனால் கால நிலை மாற்றம் தொடர்பான அறிவு மிகக் குறைவாகவே யாழ்ப்பாண மக்கள் மத்தி யில் காணப்படுகின்றது.

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் வரட்சி, கடல்நீர் மட்ட உயர்வு, வெள்ளப் பெருக்கு என்பன யாழ் குடாநாட்டைத் தாக்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. வழமையாக கோடை காலத்தில் தரைக்கீழ்நீர் நிலைகள் வற்றுவதனால் பாதிக்கப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் வரட்சியைத் தாங்க முடியாது துன்பப்படுவர்.

தற்போதுள்ள பல நீர் நிலைகள் வற்றல், நீர் உவராதல் நிலைமை ஏற்படும். மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டு கடல் மட்டத்திலிருந்து பெரும்பாலும் 20 அடி உயரத்திற்குள்ளேயே காணப்படுகின்றது.

இதனால் கடல் மட்ட உயர்வு யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை கடுமையாகப் பாதிக்கும் மேலும் மாரிகாலங்களில் ஏற்படும் வெள்ள அனர்த்தத்தினால் பல பாதிப்புக்கள் ஏற்படும். எனவே காலநிலை மாற்றத்தின் விளைவுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வளர்ச்சிக்கு சவாலான ஒன்றா கவே காணப்படுகின்றது.

ஒரு சில அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களே இச் செயற்பாட்டில் அதிக அக்கறை செலுத்துகின்றன. இது தவிர்க்கப்பட்டு முற்று முழுதாக சமூகத்தில் சேவையாற்றும் அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறு



வனங்களும் இதில் முக்கிய கவனம் செலுத்தி சகல தரப்புக்களுக்கும் அதாவது சாதாரண மக்கள் முதல் உயர்ந்த புத்திஜீவிகள் வரையில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திச் செயற்பட வைப்பதன் ஊடாக யாழ். குடாநாட்டை குறிப்பிட்ட அளவுக்கு கால நிலைப் பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்க முடியும்.

இதே போன்று சகல மக்களும் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட முடியும்.

- ➢ வீடுகளில் மரங்களை நாட்டல்
- ➢ கழிவுப் பொருட்களை பொதுவான இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்தல்
- ➢ பிளாஸ்ரிக் பொருட்களின் பாவணையைக் குறைத்தல்
- ➢ வீட்டுத் தோட்டச் செயற்பாடுகள் மற்றும் விவசாயத் தேவைக்கு இயற்கைப் பசளையையும் இயற்கை கிருமி நாசினிகளையும் பாவனை செய்தல்
- ➢ மின்சாரத்தை சிக்கனமாக பாவித்தல்
- ➢ பெற்றோல், டீசல், மண்ணெண்ணை போன்ற எரிபொருட்களின் பாவனையை இயன்றளவுக்குக் குறைத்தல்

**தி. திருசாந் SOND**

போன்ற செயற்பாடுகளால் சாதாரண மக்களும் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான பங்களிப்பினை மேற்கொள்ள முடியும் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக முன்னெடுக்கப்படாதவிடத்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் யாழ் குடாநாட்டின் சகல விடயங்களிலும் காலநிலை மாற்றம் என்பது எதிர்மறையான தாக்கத்தைச் செலுத்தி குடாநாட்டின் அபிவிருத்தியை கேள்விக் குறியாக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.


## சுவரொட்டிச் சித்திரப் போட்டி

காலநிலை மாற்றம் தொடர்பான சித்திரப் போட்டி - சிறந்த சித்திரங்களுக்கு 1ஆம், 2ஆம், 3 ஆம் பரிசில்களோடு 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

**சித்திரம் வரைதலுக்கான தலைப்புக்கள்**

1. உலகம் வெப்பமடைதலும் அதன் பிரதிபலிப்பும்
2. யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீர் சேமிப்பும் , அதன் பாவனையும்
3. மரங்களின் அழிவும் மானிட வாழ்வும்
4. பிளாஸ்ரிக் பொருள் பாவனையும் , எதிர்காலச் சந்ததியின் வாழ்வும்
5. சேதன விவசாயத்தின் முக்கியத்துவமும் அசேதன விவசாயத்தின் பாதிப்பும்

**போட்டிக்கான விதிமுறைகள்**

- ➢ வயதெல்லை 18 வயதுக்கு குறைந்தவர்கள் பிரிவு 01 இலும் , 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பிரிவு 02 இலும் உள்ளடக்கப்படுவர்.
- ➢ சித்திரங்கள் (410×297MM) (A3) அளவு தாளில் மட்டுமே வரையப்பட்டு குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.
- ➢ தாளின் பின்புறத்தில் போட்டியாளரின் பெயர், முகவரி, வயது, பிறந்த திகதி, சித்திரத்தின் தலைப்பு என்பன தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
- ➢ ஆக்கங்கள் யாவும் 01.09.2009 முன்னர் "அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இல 140, 4ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
- ➢ போட்டியின் முடிவுகள் தொடர்பாக 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு,
VDF / JSAC / SOND / TRRO
(கிறிஸ்தவ உதவி நிறுவனத்தின் பங்காள நிறுவனங்கள்) (சி-3037)

சோதனைமேல் சோதனை போதுமடா சாமி
வேதனை தான் வாழ்க்கையென்றால் தாங்காது பூமி

– கண்ணதாசன்

வலம்புரி

## சிவனே! நீயும் புத்தபிரானுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தாயா?

ஈழத் தமிழர் என்றால் அந்த ஆண்டவனுக்கும் வெறுப்பு. அதனாலன்றோ தமிழ் மக்கள் யுத்தத்தால் அவலப்பட்டபோதெல்லாம் மழையாய் கொட்டி புயலாய் வீசி மக்களைத் தண்டித்தான்.

வன்னிப் பகுதியில் யுத்தம் நடந்தபோது மக்கள் பல தடவைகள் இடம் பெயர்ந்த வேளையில் என்றுமில்லாத பெருவெள்ளம் ஓலைக் குடிசையில் ஒதுங்க முடியாத நிலையில் இரவு பகல் மழையென்றால் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்பதை உணரமுடியும்.

இப்போது சுமார் மூன்று இலட்சம் மக்கள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் இவர்கள் இருந்தார்கள் அல்லது இவர்களுடன் விடுதலைப் புலிகள் இருந்தார்கள் என்ற காரணத்தால், மூன்று இலட்சம் மக்கள் முகாம்களில் அடைபட்டுள்ளனர்.

சொந்த இருப்பிடத்தை–உறவுகளை–உடைமைகளை எல்லாம் இழந்து நொந்த மனத்துடன் முகாம்களில் அடைபட்டிருக்கும் பரிதாபம் மிகவும் வேதனைக்குரியது.

ஒரு புறத்தில் நல்லூர் கந்தனின் மஹோற்சவம் மறுபுறத்தில் மடு தேவாலயத்தில் ஆராதனை என இறைவழிபாடு இடம் பெறும்போது மூன்று இலட்சம் மக்கள் படும் துன்பத்தை அவலத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாமல் இருப்பது ஏன்?

அந்தளவு தூரத்திற்கு இந்த மண்ணில் மனித நேயம், இரக்கம், அன்பு என அனைத்தும் அடியோடு அறுபட்டுவிட்டதா?

அல்லது மனிதர்களை வதைப்பதில் மகிழ்வா? இறைவா என்று அவலக் குரல் எழுப்பினாலும் உடன் கருணை ஈழத்தமிழ் மக்களுக்கு கிடைப்பதாக இல்லை.

அழைத்தவர் குரலுக்கு வருவேன் என்பதைக் கீதையிலும், தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்கு தாய்ப் பன்றியாக தோன்றி பால் கொடுத்த கதையை புராணத்திலும் படித்தோமே அன்றி உன்னில் வேறெந்த கருணையைக் கண்டோம்!

தாயை இழந்த பன்றிக்குட்டிகளுக்கு இரங்கிய பரம்பொருளே! தாயை இழந்த தமிழ்க் குழந்தைகள் மீது உனக்கு இரக்கம் இல்லாமல் போனது ஏன்?

நீயும் சிறுபான்மைக் கடவுள் ஆகிவிட்டாயா? அல்லது கௌதம புத்தபிரானுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு இந்தியாவைப் போல் பழிதீர்க்கின்றாயா?

வறண்ட நிலங்கள் ஏராளம் இருக்க வவுனியாவில் மழைவெள்ளம் பொழிவது எதற்காக? மக்களை வதைக்கவா? தொற்றுநோயை கொடுக்கவா? ஓ! சிவனே! உன்னோடும் அதிகம் கதைத்தால் சீற்றம் கொள்வாய். தாய்ப் பன்றியாக வந்ததை மறந்து பன்றிக்காய்ச்சலையும் வெந்த மண்ணில் வேல் பாய்ச்சுவதாய் தந்து விடுவாய்.

இருந்தும் உன் நாமத்து ஐந்தெழுத்துத்தான் எங்கள் படைக்கலம். அதுவே எங்கள் துயர் துடைக்கும் அணிகலன். நம்புகின்றோம் இறைவா!

# வணங்கா மண் நிவாரணப்பொருட்களை விநியோகிப்பதில் புதிய சிக்கல்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தகவல்

(கொழும்பு)

சென்னையில் இருந்து கொலராடோடு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு கொழும்புத்துறை முகத்தில் தோங்கிக் கிடக் கும் நிவாரணப்பொருட்களை கொழும்புத்துறைமுகத்தில் இருந்து வெளி அகற்றுவதில் புதிய சிக்கல் தோன்றியுள்ளதாக இலங் கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் சுரேன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக புலம்பெயர்ந்த மக்களால் இடம்பெயர்ந்த மக்களுக்காக அனுப் பப்பட்ட நிவாரணப்பொருட்களை வவுனி யாவுக்குக் கொண்டு செல்வதை மேலும் சில தினங்களுக்கு தாமதம் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப் பிட்டார்.

இந் நடவடிக்கை தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் புலம் பெயர்ந்த மக்களால் சேகரித்து அனுப்பப்பட்ட 880 மெற் றிக்தொன் நிறையுள்ள நிவாரணப்பொருட்கள் 27 கொள்கலன் களில் அடைக்கப்பட்ட நிலையில் கொழும்புத்துறைமுகத்தில் பல நாட்களாக தோங்கிக்கிடக்கின்றன. இந்தப்பொருட்களை வவுனியாவுக்குக் கொண்டு சென்று சேர்ப்பதற்காக மிகவும் பிரயத் தனங்களை எடுத்துள்ளோம்.

துறைமுகத்தில் இருந்து பொருட்களை வெளியகற்றுவதற்கான சகல பணிகளும் முடிவடைந்தவுடன் இவ் வார இறு திக்குள் அவற்றை வவுனியாவுக்கு கொண்டுசெல்ல ஏற்பாடு களைமேற்கொண்டிருந்தோம். ஆயினும் கொழும்புத் துறை முகத்திற்கு வந்துள்ள பொருட்கள் தொடர்பாக இந்திய செஞ் சிலுவைச் சங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ள ஆவணங்கள் பூர் ணத்துவமானவையாக இல்லை என்பதால் புதிய சிக்கல் தோன் றியுள்ளது.

அதாவது இந்த கப்பலில் மருந்துப்பொருட்கள் , உணவுப் பொருட்கள் போன்றவை ஏற்பட்டுள்ளதாக இந்திய செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பிய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது தவிர அதில் என்ன என்ன மருந்துகள் எவ்வளவு அளவில் இருக்கின்றன? என்ன உணவுப்பொருட்கள் உள்ளடங்கியுள் ளன? இவை அனைத்தும் பாவனைக்கு உகந்தவையாகவும் தரமானதாகவும் இருக்கின்றனவா? போன்ற முழுமையான விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் எந்தக் கொள் கலனில் என்ன பொருள் இருக்கின்றது என்று குறிப்பும் எழுதப் படவில்லை.

எனவே இப்பொருட்களை வவுனியா மக்களுக்கு விநியோ கிப்பதற்கு முன்னர் அவற்றின் தரம் மற்றும் அளவு தொடர் பான தெளிவைப்பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாக சுங்கத் திணைக்களப்பணிப்பாளர் எமக்கு அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு கொள்கலன்களையும் திறந்து பார்த்து மேற்படி விபரங்களை பெறவேண்டியுள்ளதால் கொழும்பு துறைமுகத் தில் இருந்து பொருட்களை வெளியகற்றுவதற்கு இன்னும் சில தினங்கள் செல்லலாம்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் விட்ட இந்த தவறின் விளைவாக இப்படியொரு புதிய பிரச்சினை தலைதூக்கியுள்ளதுடன். அடுத்த வாரம் நடுப்பகுதியிலேயே நிவாரணப்பொருட்களை வவுனியாவுக்கு கொண்டுசெல்லக் கூடியதாக இருக்கும் என நினைக்கிறோம். எவ்வாறு இருந்த போதிலும் இப்பணிகளை முடிந்த அளவு துரிதப்படுத்துவதற்கான சுகாதார அமைச்சுக் குச் சென்று சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் பலரிடம் இது விடயமாகப்பேசியுள்ளேன் என்றார். (ஓ–6)

## மண்டலாபிஷேக பூர்த்தியும் இறுவெட்டுவெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வாரி வணம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மாககாளி அம்பாளின் மண்டலாபிஷேகம் பூர்த்தி கலசாபிஷேகமும் தேத்திரப்பபாலும் இறுவெட்டு வெளியீடும் நிகழ்வு சாவகச்சேரி வாரி வனவு ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான மண்டபத்தில் நாளை திங்கட் கிழமை பி.ப. 2 மணிக்கு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப் பாளர் கு. பிறேமகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் மா.வேதநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல் விப்பணிப்பாளர் திரு.அ.வேதநாயகம் வலிகாமம் வலயக் கல் விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.என்.இராதாகிருஸ்னன் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.


இறுவெட்டை முதன்மை விருந்தினர் மா. வேதநாதன் வெளிட்டு வைக்க முதல் பிரதியை அனுசரணையாளரும் திருப்பணியாளருமாகிய வைத்திலிங்கம் சிவராஜா பெற்றுக் கொள்வார். வெளியீட்டுரையை தென்மராட்சி கல்வி வலய ஆரம்

மனித மனங்கள் புயற்காற்றில் சிக்கி,
காற்றின் திசையிலும், நீரோட்டங்களினூடும்
அடித்துச் செல்லப்பட்டு திசை தவறிக்
கதியிழக்கின்றன... தடம் மாறுகின்றன
அவ்வாறே இழப்புக்களை எதிர்கொள்ளும்
சமூகமும் ... கவலையில் மூழ்கி...
ஆற்றோடு போக
மனிதரொன்றும்
மரக்கட்டைதன்

சவாலே சமாளி
மருத்துவ கலாநிதி வெ.நாகநாதன்

அல்லர்
மூழ்கி மாள்---வதற்கு
எலிகளும் அல்லர்
காற்றோடும் நீரோடும் அல்ல
புயலோடும் பூகம்பத்தோடும் என்றல்ல
ஆழிப் பேரலையோடும் அதையும் தாண்டி தீயோடும்
தீப் பிழம்போடும் ... என்று வலிசுமந்த...
பூமித் தாய் பிரசவித்த பூக்கள் நாம்.
சவால்களை எதிர்கொண்டு அவை தாண்டி
புதிய விசையுடன்... ①

## இயேசு ஒன்றிப்பின் சின்னம்



இன்று உலகம் முழுவதும் மத நல்லிணக்கம் , மக்கள் ஒன்றிப்பு, நதிகள் ஒன்றிணைப்பு என்ற பேச்சுக் களும், அதற்கான முயற்சிகளும் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன.செயலில் இறங்கிவிட் டோமோ? இல்லையோ? பேச்சளவில் ஆரம் பித்துவிட்டோம்

இதில் இருந்து ஒன்று மட்டும் புரிகி

### பரமபிதா காட்டிய பாதை

றது ஒன்றிப்பின் அவசியத்தை இந்த உலகம் புரிந்து கொண் டது. ஆனால் இந்த ஒன்றிப்பை எதில் எதிர்பார்க்கின்றோம்? என் பது தான்கேள்வி .

நாம் எதிர்பார்ப்பதெல்லாம் வெறும் ஒப்புமையே (Uniformity) தவிர உண்மையான ஒற்றுமை (Unity) அல்ல. ஒப்புமை என்பது புறத்தே ஆனது. வெறும் உடலையும், பழக்க வழக்கங் களையும் மட்டும் சார்ந்த ஒன்று . இது உண்மையான மன மாற்றத்தையே, உறவையோ ஏற்படுத்தாது. மாறாக, ஒற்று மையே உன்மையான வளர்ச்சிக்கும் , உறவுக்கும் வழி வகுக்கும். இதற்கு நாம் அனைவரும் ஒன்றித்து செயற்பட்டு வாழ வேண்டும்.

இதே கருத்தைத்தான் இன்றைய . வாசகங்களிலும் குறிப்பாக நற்செய்தியிலும் பார்க்கின்றோம். இன்றைய முதல் வாசகம் நீதிமொழி புத்தகத்தில் "பாருங்கள். நான் தரும் உணவை உண்ணுங்கள். நான் கலந்து வைத்துள்ள திராட்சை ரசத்தை பருகுங்கள், பேதமையை விட்டுவிடுங்கள், அப் பொழுது வாழ்வீர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இங்கு உண வானது (விருந்து) பேதங்களை அகற்றி, உறவினை மன ஒற்றுமையை வளர்ப்பதாக காட்டப்பட்டிருக்கிறது.

உணவின் (விருந்து) தன்மையே அது தான். பேதங்களை, வேற்றுமைகளை அகற்றி மன ஒன்றிப்பை , உறவை வளர்க்கின்றது. அதனால் தான் இதைப் புரிந்து கொண்ட இயேசுவும், தன்னை உணவிற்கு ஒப்பிட்டு "விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்" என்கிறார்.

ஆம் , பாவிகளை மீட்கத்தான் ,இயோசு மனுவானார் ; ஏழைகள் வாழத்தான் இயோசு உணவானார் ; இந்த உலகம் வாழத்தான்இயேசு நம்மோடு குடி கொண்டார்.

நாம் அனைவருக்கும் ஒன்றிப்பின் சின்னமாக இயேசு இருக்கின்றார். அதை எல்லோருக்கும் வாழ்வளிக்கும் உணவின் வழியாகத் தருகின்றார்.

கிறிஸ்தவர்களாகிய நாம், வருடத்திற்கு ஒரு முறை கிறிஸ்தவ ஒன்றிப்பின் வாரம் என்று பெயரளவில் நடத்தி விட்டால் மட்டும் போதுமா? நம்மைப்பிரிக்கும், ஒன்றிப்பிற்கு பாதகமாக இருக்கும் தடைகளான சாதி, மதம், இனம், மொழி வெறிகளை என்றைக்கு வேரழிப்பது? அழிப்பு இல்லை யெனின் , ஆக்கம் இல்லை எனவே , பிரிக்கும் தடைச்சுவர்க ளான மேற்கூறிய வெறிகளை அழிப்போம், தடைகளை உடைப்போம். இணைக்கும் பாலங்களான அன்பை, அமைதியை, மன்னிப்பை, சமத்துவத்தை மண் ணில் காட்டுவோம்.

ஜோன் எரப்பேட்



# திருவருள் மிகு சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## பரிவார மூர்த்தி ஸ்ரீ மகாகாளி அம்பாள்

# கலச சங்காபிஷேக விஞ்ஞாபனம் -2009

## மங்களகரமான விரோதி வருடம் ஆவணி முதல் நாள் (17.08.2009) திங்கட்கிழமை

தேவி துதி
மேதாஸி தேவி விதி தாகில – சாஸ்த்ர –ஸாரா
துர்க்காளி துர்க்க –பவஸாகர –நௌ – ரஸங்கா!
ஸ்ரீ கைடபாரி ஹருதயைக – க்ருதாதி வாஸா
கௌரீ த்வமேவ சசி மௌலி – க்ருத – ப்ரிதி ஷடா!!
(தேவி மாஹத்மியம் அத் 04 சுலோகம் 11)

தேவி ! சாஸ்திரங்கள் அனைத்தின் சாரத்தையுணரும் புத்தி வடிவினள் நீ !
கடந்தற்கரிய பிறவிக் கடலை கடந்துவிக்கும் பற்றின்மை எனும் படகாகிய துர்க்காதேவி நீ !
விஷ்ணுவின் இருதயத்தைத் தனியிடமாகக் கொண்டு விளங்கும் ஸ்ரீதேவி நீ !
சந்திர மௌலியிடம் பிரியாதுறையும் கௌரியும் நீயே !

அம்பாள் மெய்யடியார்களே!

தென்மராட்சி பதியில் சுந்தர பஞ்சதள இராஜகோபுரத்துடன் வாரிவனம் திவ்ய பதியில் பல நூறு ஆண்டுகளாக திருவருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் பரிவார மூர்த்தியான ஸ்ரீமகா காளியம்பாளுக்கு மங்களகரமான விரோதி வருடம் ஆனித்திங்கள் 19 ஆம் நாள் (04.07.2009) நடைப்பெற்ற நூதன கும்பாபிஷேகம் பின் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா மங்களகரமான விரோதி வருடம் ஆவணி முதல் நாள் 17.08.2009 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு முத்துமாரி அம்பாளுக்கு சங்காபிஷேகமும், காளியம்பாளுக்கு கலச சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. தொடர்ந்து விசேட பூசைகள், வேத தோத்திர திருமுறைப் பாராயணம் ஓதுதல், மகேஸ்வரபூசை (அன்னதானம்) என்பன நடைபெறவுள்ளது.அதனைத் தொடர்ந்து தோத்திரப் பாடல்கள் இறுவட்டு வெளியிடும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

## அருள்மிகு வாரிவன ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் ஸ்ரீ மகா காளியம்மன் கலச சங்காபிஷேக அழைப்பிதழ்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கரும்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.



அருள்மிகு வாரிவன ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வெளி வீதியில் தனித்துவமாக அமைந் துள்ள ஸ்ரீ மகா காளியம் மனின் கும்ப்பாபிஷேகம் 4.7.2009 நடைபெற்று தொடர்ந்து 45 நாள் மண்டலாபிஷேகம் நிகழ்த்தி 17.08.2009 அன்று சங்காபிஷேகமும் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

45 நாட்கள் மண்டலாபிஷேக நிகழ்வில் தம் உள்ளன் போடு பணியாற்றிய ஒவ்வொரு நாள் உபயகாரர்களுக்கும், குருக்களுக்கும், அவரது தலைமையில் பணியாற்றியகுருக்கள், ஆச்சாரியார்களுக்கும், தொண்டர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவிப்பதுடன் அவர்கள் பல்லாண்டு நலத்துடன் வாழ்ந்து பணியாற்ற மாரியாத் தாளினதும் ஸ்ரீ மகா காளியம்மனினதும் அருளாட்சி கிடைக்க வேண்டு கிறேன்.

தட்பமுடன் வெப்பமும் அதாவது தண்மையுடன் வெம்மையும் இருந்தால் தானே சமனிலை ஏற்படும். ஒருவனிடம் வெப்பம் கூடிவிட்டால் சுரம் என்கிறோம். தட்பம் கூடி விட்டால் சன்னி என்கிறோம். உடல் நிலையில் கூட வெப்பமும் தட்பமும் சமநிலையில் இருக்கும் போது தான் தேக ஆரோக்கியம் உருவாகும். மழையோடு வெயிலும் இருக்கின்ற சீதோஷ்ண நிலையில் தானே பயிர் வளங்கள் சிறக்கும். எனவே தான், மாரியும் காளியும் ஒருங்கே சிறக்கும் அருள்மிகு வாரிவன ஸ்ரீ முத்து மாரியம்பாள் - ஸ்ரீ மகா காளியம்பாளின் சங்காபிஷேக நிகழ்வில் அடியார்கள் அனைவரும் ஆலயத்துக்கு வருகை தந்து தாயார்களின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம். 17.08.2009 அன்று நடைபெறும் அபிஷேக பூசையில் குறிப்பாக ஸ்ரீ மகா காளியம்மனுக்கு கலச சங்காபிஷேகமும் ஸ்ரீ முத்து மாரியம்மனுக்கு சங்காபிஷேகமும் நடைபெறும் என்பதனைக் கருத்திற்கொள்க.

தோத்திரப்பாடல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

"திருப்பணி வித்தகர்", மாரிமைந்தன்,
திருப்பணியாளர்,
திரு.வைத்திலிங்கம் சிவராசா

## மங்கள வாத்தியம்

R.முருகானந்தம் (நடுவில்) கோண்டாவில் — R.சுதா குழுவினர் கட்டப்பிராய்
தையல்நாயகி (நாதஸ்வரம்) புஸ்பராணி (தவில்),கல்வியங்காடு — வட்டூர் இராமநாதன் புதல்வர்கள்

இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து எம்பெருமாட்டியின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.
"எல்லோரும் இன்புற்று வாழ்க"
'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

**மாரிமைந்தன் திருப்பணி வித்தகர்**
**திருப்பணியாளர்**
**திரு.வைத்திலிங்கம் சிவராசா (சிவா றேடிங் கம்பனி)**
ஆலய ஆதீன பிரதம குரு சிவஸ்ரீ தம்பையாக் குருக்கள்
வீரபத்திரக் குருக்கள்

விரோதி வருடம் வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான வளாகத்து அமைந்து அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ மகாகாளி அம்பாளின் மண்டலாபிஷேகப் பூர்த்திக் கலச சங்காபிஷேகமும் தோத்திரப் பாடல் இறுவட்டு வெளியீடும்.

இடம்: சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மண்டபம்.
காலம்: திங்கட்கிழமை 17.08.2009. பிற்பகல் 2.00மணி.
தலைவர்: உயர்திரு.கு.பிறேமகாந்தன்
(வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)
முதன்மை: உயர்திரு.கலாநிதி.மா.வேதநாதன்
விருந்தினர் (தலைவர், இந்துநாகரிகத்துறை ,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
சிறப்பு: விருந்தினர்கள்
1.திருமதி.அ.வேதநாயகம் (வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
2.திரு.வ.செல்வராசா (வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)
3.திரு.ப.விக்னேஸ்வரன் (வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)
4.திரு.ஜே.என்.இராதாக்கிருஷ்ணன் (வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்)

பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம். பாடசாலை அதிபர்களிடம் அப் பாடசாலைக்குரிய இறுவட்டு இலவசமாக வழங்கப்படும்.மாணவர்கள் தனித்தனியாக இறுவட்டுக்களை ரூபா 50 செலுத்தி சலுகை விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

### நிகழ்வுகள்

1.இறைவணக்கம்–யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய மாணவர்கள்.
2.ஆசியுரை – சிவஸ்ரீ த.வீரபத்திரசிவக்குருக்கள்
3.தலைமையுரை–
4.இறுவட்டு வெளியீடு –முதன்மை விருந்தினர் திரு.மா.வேதநாதன் அவர்கள் அனுசரணையாளரும் திருப்பணியாளருமாகிய வைத்திலிங்கம் சிவராஜா அவர்களுக்கு வழங்குவார்.
5.வெளியீட்டுரை – திரு.த.ஸ்ரீஸ்கந்தராஜா (ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம் சாவகச்சேரி)
6.ஏற்புரை – பாடலாசிரியர் பொன்ஸ்ரீ வாமதேவன்
7.கௌரவிப்பு – பாடலாசிரியர் பொன்ஸ்ரீ வாமதேவன் அவர்களை முதன்மை விருந்தினர் அவர்கள் கௌரவிப்பார்.
8.சிறப்பு விருந்தினர் உரை
9. முதன்மை விருந்தினர் உரை
10.நன்றியுரை – திரு.கு.சுமுகலிங்கம் (ஆசிரியர் யாழ். சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்).
11.இறைவணக்கம்

## தரம் 06 முதல் தரம் 11 வரையான சைவநெறிப் பாடப் புத்தகத்திலுள்ளவை

## தோத்திரப் பாடல்கள் ஒலிவடிவச் செயற்றிட்டம்

**பாடியவர்:** பொன்.ஸ்ரீ.வாமதேவன்.
சாவகச்சேரி இந்துக் கல்லூரியினதும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியினதும் இசையாசிரியர்,சங்கீத வித்துவான்.



**பின்னணிப் பாடல்கள்:**
இசைக்கலைமாணி ரி.தமிழினி.
செல்வி சைந்தவி பரமேஸ்வரன்
**மிருதங்கம்:**
இசைக்கலைமாணி வ.ரமணா.
**அறிவிப்பாளர்:** திரு.த.கெங்காதரன்
உபஅதிபர், இராமநாதன் கல்லூரி.
**நெறிப்படுத்தலும் ஒ[illegible]ங்கமைப்பும்:**
திரு.தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா.
தென்மராட்சி கல்வி வலய
ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்.
**ஒலிப்பதிவு:**
சத்தியன்.
ஸப்தமி கலையகம்-யாழ்ப்பாணம்.
**ஏற்பாட்டாளர்:**
சைவப்புலவர் குமாரசுவாமி சுமுகலிங்கம் J.P
யா/மட்டுவில் மகாவித்தியாலயம்.
**அனுசரணை:**
திருப்பணியாளர்.திரு.வைத்திலிங்கம் சிவராஜா






திருப்பணியாளர்
வை. சிவராசாவும்
தென்மராட்சி கல்வி வலயமும்.



ஓம் சக்தி

மகாகாளி அம்பாளின் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 நாள் மண்டலாபிஷேக உபயம் செய்யும் அன்பர்களுக்கும் அடியவர்களுக்கும் மேன்மேலும் மகாகாளியின் அருளாசி கிடைக்க பிரார்த்தித்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*மண்டலாபிஷேக உபயகாரர் விபரம்*

**1ம் நாள்**
திரு.V.சிவராசா
சிவாறேடிங் கம்பனி
வெள்ளவத்தை,கொழும்பு-6
**2ம் நாள்**
திரு.V.சின்னத்தம்பி
டச்சுறோட்,சாவகச்சேரி
**3ம் நாள்**
திரு.V.சிவகுமார்
சுவிஸ்லாந்து
**4ம் நாள்**
திரு.A.அருட்குமார்
இலண்டன்
**5ம் நாள்**
திரு.திருமதி.தவானந்தம்
குடும்பம், இலண்டன்
**6ம் நாள்**
திரு.திருமதி.கணேசநாதன்
குடும்பம், இலண்டன்
**7ம் நாள்**
S.S.நாகரத்தினம்
சபாரத்தினம் நகையகம்
கண்டிவீதி,சாவகச்சேரி
**8ம் நாள்**
J.வைகுந்தன்
கதிரவன் இரும்பகம்
டச்சுறோட், சாவகச்சேரி
**9ம் நாள்**
V.வடிவழகன்
தர்சன் மரக்காலை
கண்டிவீதி,சாவகச்சேரி
**10ம் நாள்**
திரு.T.ஸ்ரீமோகனதாஸ்
தேனுகளஞ்சியம்,திருநெல்வேலி
**11ம் நாள்**
R.தம்பையா
அம்பாள் றேடர்ஸ்
கண்டிவீதி, சாவகச்சேரி
**12ம் நாள்**
திரு.V.சிவபாலன்
இலண்டன்
**13ம் நாள்**
திரு.T.ஸ்ரீமோகனதாஸ்
தேனுகளஞ்சியம்,திருநெல்வேலி
**14ம் நாள்**
திரு.V.மகாலிங்கம்
தட்டாதெரு
சங்கத்தானை,சாவகச்சேரி
**15ம் நாள்**
திரு.K.அன்பரசன்
தபாற்கந்தோர் வீதி, சாவக்சேரி
**16ம் நாள்**
திரு.V.சிவராசா
ஸ்ரீமுத்துமாரி அம்மன் றேடர்ஸ்
அன் சிவா றேடிங் கம்பனி
யாழ்.கொழும்பு.
**17ம் நாள்**
திரு.S.தயாபரன்
அன் திருமதி.தவராணி
கொழும்பு
**18ம் நாள்**
திரு.S.சண்முகநாதன்
சண்முகம் அன் சன்ஸ்
கண்டி வீதி ,சாவகச்சேரி.
**19ம் நாள்**
திரு.S.சிவகுமார்
V.S.S றேடர்ஸ்,வவுனியா
**20ம் நாள்**
கோயில் பூசை
திரு.V.சிவராசா
**21ம் நாள்**
திரு.P.பஞ்சாட்சரம்
சாரங்கா நகைமாடம்
கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்
**22ம் நாள்**
திரு.சந்திரன்
கிராம்புவில் ,சாவகச்சேரி
**23ம் நாள்**
திரு.S.நாகராசா
டச்சு வீதி,சாவகச்சே
**24ம் நாள்**
திரு.N.சிவபாலன்
அம்பிகா மருந்தகம்
கண்டிவீதி,சாவகச்சேரி
**25ம் நாள்**
திரு.S.சசிக்குமார்
சீதா ஜுவல்லறி
நியூ மார்க்கெட்
கண்டி வீதி,சாவகச்சேரி
**26ம் நாள்**
திரு.K.சுதாகரன்
அன்னை றெக்றைல்ஸ்
நியூமார்க்கட், சாவகச்சேரி
**27ம் நாள்**
திரு.P.நடராசா
கல்லடி வீதி,சாவகச்சேரி
**28ம் நாள்**
திரு.R.சுரேஸ்
ஸ்ரீராம் புடவையகம்
நியூமார்க்கெட் உட்புறம்
சாவகச்சேரி
**29ம் நாள்**
இலங்கை வங்கி
கண்டிவீதி ,சாவகச்சேரி
**30ம் நாள்**
திரு.V.பரம்சோதி
அம்பாள் களஞ்சியம்
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
**31ம் நாள்**
திரு.K.சிவறஞ்சன்
சிவனருள் பல்பொருள் வாணிபம்
கண்டிவீதி ,சாவச்சேரி
**32ம் நாள்**
திரு.T.ஸ்ரீமோகனதாஸ்
தேனு களஞ்சியம்
திருநெல்வேலி
**33ம் நாள்**
திரு.N.சந்திரன் ஸ்தபதி
நவாலி வடக்கு , நவாலி
**34ம் நாள்**
திரு.R.தில்லைநாதன்
கல்வயல் , சாவகச்சேரி
**35ம் நாள்**
திரு.P. ரவிச்சந்திரன்
எஸ்.கே.பல்பொருள் வாணிபம்
தபாற்கந்தோர்வீதி ,சாவகச்சேரி
**36ம் நாள்**
N.ஜெயவீரசிங்கம்
மதுரா றேடர்ஸ்
கண்டிவீதி, சாவகச்சேரி
**37ம் நாள்**
இந்திரன் ஆர்த்திகா
சங்கத்தானை, சாவகச்சேரி
**38ம் நாள்**
திரு.திருமதி தங்கராசா குடும்பம்
சிவன்கோவிலடி சாவகச்சேரி
**39ம் நாள்**
திருமதி.சிவயோகம்
வெள்ளவத்தை, கொழும்பு.
**40ம் நாள்**
திருமதி.சுபத்திரா
ஆடியம்பிட்டி வீதி , சாவகச்சேரி
**41ம் நாள்**
தேசிய சேமிப்பு வங்கி கண்டி வீதி
சாவகச்சேரி
**42ம் நாள்**
திரு.S.சிறிரஞ்சன்
றஞ்சன் நகைமாடம் கச்சாய்றோட்
சாவகச்சேரி.
**43ம் நாள்**
திரு.S.சந்திரபாலன்
சாவகச்சேரி வடக்கு டச்சு றோட்
மீசாலை
**44ம் நாள்**
திரு S.சிவயோகன்
டச்சுவீதி, சாவகச்சேரி
**45ம் நாள் பூர்த்தி**
திரு V.சிவராசா
வெள்ளவத்தை
கொழும்பு-6.

மண்டலாபிஷேக பூர்த்திஅன்று 108 பாற்கலச அபிஷேகம் நடைபெறும். இந்நிகழ்வில் அடியவர்கள் அனைவரும் கலந்து மகா காளியின் அருளாசியைப் பெற்று சகல சௌபாக்கியங்களோடு நோய் நொடியின்றி நீடுழி வாழ்கவென மகா காளியின் பாதாரவிந்தங்களை தழுவி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
சுபம்

*இவ்வண்ணம்*
*மாரிமைந்தன் திருப்பணியாளர்*
*திரு V.சிவராசா குடும்பம்*
*ஆலய குரு வீரபத்திர குருக்கள்*


ஸ்ரீ மகாகாளி அம்பாள் பணிவோம்
மண்ணில் எல்லோரும் நல்லவண்ணம் வாழ்வோம் ஸ்ரீ மகாகாளி அம்பாளின் கலச சங்காபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்கள்

ஸ்ரீ முத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்
இல 342, 344, 346 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

லக்சுமி ரேடர்ஸ்
இல 316, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அம்பாள் களஞ்சியம்
இல 01, பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

A.M.T (ரான்ஸ் போட் சேவிஸ்)
பருத்தித்துறை வீதி,
இருபாலைச் சந்தி,கோப்பாய்.

# சிக்கலில் இலங்கை கிரிக்கெட் சபை

# உலகக் கோப்பை போட்டிகளை நடத்தும் வாய்ப்பு பறிபோகுமா?

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான சமீபத்திய இருபது -20 போட்டியின் போது பாதுகாப்பு ஏற்பாடுகள் சரிவர செய்யப்படவில்லை. போட்டியை காண வந்த சிறுவர்கள், பெண்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். இதையடுத்து இலங்கையில் உலக கோப்பை போட்டிகள் திட்டமிட்டபடி நடத்தப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

கொழும்பு பிரேமதாசா அரங்கில் கடந்த 12ஆம் திகதி இலங்கை-பாகிஸ்தான் அணிகள் மோதிய இருபது -20 போட்டி நடந்தது. இப்போட்டியின் போது பாதுகாப்பு குறைபாடு அம்பலமானது. முறைப்படி டிக்கெட் வைத்திருந்த ஆயிரக்கணக்கான ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த ரசிகர்கள் பொலிஸாரை நோக்கி கற்களை எறிந்தனர். இதற்கு பதிலடியாக பொலிஸாரும் கற்களை எறிந்தனர். பின்னர் குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட அனைவர் மீதும் தடியடி நடத்தினர்.

## வீண் குழப்பம்

பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் இணைந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வதில் ஒத்துழைப்பு காணப்படவில்லை. இதனால்தான் வீண் குழப்பங்கள் ஏற்பட்டன. மிகவும் குறுகிய பாதையில் ஊடகவியலாளர்கள், இலங் கை கிரிக்கெட் சபை அதிகாரிகள், ரசிகர்கள் என அனைவரும் வரவேண்டியிருந்தது. ஒரே ஒரு நுழைவாயிலில் சோதனை நடந்தப்பட்டதால் ஆயிரக்கணக்கானோர் நீண்ட வரிசையில் காத்திருக்க நேரிட்டது.

சோதனை என்ற பெயரில் ரசிகர்கள் சுமார் இரண்டு மணி நேரம் நுழைவாயிலில் நிறுத்தப்பட்டனர். இதன் உச்சக்கட்டமாக இலங்கை கிரிக்கெட் சபையின் கூடுதல் தலைமை நிர்வாகி அஜித் ஜெயசேகராவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இவர் தனது அடையாள அட்டையை காண்பித்த போதும் கண்டு கொள்ளவில்லையாம். இது பாதுகாப்பு பொறுப்பை ஏற்றுள்ள இராணுவ அதிகாரி லோரான்ஸ் பெர்னாண்டோவின் கவனக்குறைவுக்கு உதாரணம்.

## அவசர கூட்டம்

இது போன்ற பாதுகாப்பு குறைபாடுகள் இலங்கை கிரிக்கெட் சபைக்கு சிக்கலை உருவாக்கியுள்ளது. வரும் 2011 இல் இந்திய துணை கண்டத்தில் உலகக் கோப்பை போட்டிகள் நடக்கவுள்ளன. இதில் ஏற்கனவே பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக பாகிஸ்தானுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

இன்னும் 20 மாதங்கள் உள்ள நிலையில் இலங்கையிலும் பாதுகாப்பு ஏற்பாடு திருப்தியாக இல்லை. இங்கு நடக்கவுள்ள உலகக் கோப்பை காலிறுதி, அரையிறுதி உள்ளிட்ட போட்டிகள் வேறு இடத்துக்கு மாற்றப்படலாம்.தவிர இந்தியா, இலங்கை, நியூசிலாந்து அணிகள் அடுத்த மாதம் பங்கேற்கும் முத் தரப்பு தொடருக்கும் (செப். 8-14) சிக்கல் ஏற்படலாம். இங்கு நடக்கும் பிரச்சினைகளை சர்வதேச கிரிக்கெட் சபை(ஐ.சி.சி.) கூர்ந்து கண்காணித்து வருகிறது.

இதனை உணர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இலங்கை கிரிக்கெட் சபை அவசரமாகக் கூடி ஆலோசித்துள்ளது. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால் மட்டுமே உலக கோப்பை போட்டிகளை நடத்தும் வாய்ப்பை இலங்கை தக்க வைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சின்சினாட்டி டென்னிஸ்

# வில்லியம்ஸ் சகோதரிகள் தோல்வி

(சின்சினாட்டி)

வெஸ்டர்ன் அன்ட் சதர்ன் பினான்சியல் குரூப், பெண்கள் ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் 2ஆம் நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவரை போட்டித் தர நிலையில் இடம்பெறாத ஆஸ்திரியாவின் பாம்மர் 7:5 6:4 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார்.

தொண்டை வலியால் அவதிப்பட்ட செரீனா, தான் வழக்கமான உடல் தகுதியுடன் இல்லை என்று கூறினார். மேலும் அவர் எனது டென்னிஸ் வாழ்க்கையில் இது போல் ஒருபோதும் மோசமாக விளையாடியது இல்லை. உண்மையிலேயே இது எனக்கு மிகவும் மோசமான ஒரு ஆட்டமாகும்.

இந்த ஆட்டத்தில் நான் சுமார் 50 முறை தவறுகள் செய்திருப்பேன் என்று நினைக்கிறேன். இவ் ஆட்டத்தை நான் நன்றாக ஆடவில்லை. யாராக இருந்தாலும் என்னை வீழ்த்தி இருக்கலாம் என்று செரீனா வேதனையுடன் குறிப்பிட்டார்.

செரீனாவின் அக்கா வீனஸ் வில்லியம்ஸும் அதிர்ச்சி தோல்வியை தழுவினார். அவரை இத்தாலியின் பிளவியா பென்னட்டா 7:6 (2), 6:4 என்ற நேர்செட்டில் விரட்டினார்.

வில்லியம்ஸ் சகோதரிகள் வெளியேறிய நிலையில் பெல்ஜியத்தின் கிம் கிலிஸ்டர்ஸ் தொடர்ந்து அசத்தி வருகிறார்.

குழந்தை கிடைத்து இரண்டு ஆண்டுகள் கழித்து மீண்டும் டென்னிஸுக்கு திரும்பி உள்ள அவர், 3 வது சுற்றில் பிரெஞ்சு ஓபன் சம்பியனான ரஷியாவின் ஸ்வெட்லானா குஸ்னட்சோவாவை 6:4, 4:6,6:2 என்ற செட் கணக்கில் வீழ்த்தி கால்இறுதிக்கு முன்னேறினார்.

கால் இறுதியில் கிலிஸ்டர்ஸ் நம்பர்-1 வீராங்களை ரஷியாவின் தினரா சபினாவை எதிர்கொள்கிறார்.

# முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

கோப்பாய்க் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுடனான முக்கிய கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மிக முக்கியமான தகவல்கள் சேகரிக்க வேண்டியிருப்பதால் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

# வெளியீட்டு விழா

நெடுந்தீவு முகிலனின் 4 ஆவது தொகுப்பான அகதியின் முகம், 5 ஆவது தொகுப்பான கனவுகளின் வாசகன் ஆகிய கவிதை நூல்களின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-4)


## தவறிவிட்டது

அராலி வடக்கு, வட்டுக்கோட்டை (மயிலியப்புலம்) என்னும் முகவரியைச் சேர்ந்த ஜெயமலர் சிறீகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (696184879V) 28.07.2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். (3238)

## தேவை

யாழ்ப்பாணம் நகருக்குள் வீடு ஒன்று வாடகைக்கு தேவை. பிரதான வீதிக்கு அருகாமையில்.

தொடர்புகளுக்கு:-
071 9364237
077 3897129
(3206)

## ஜோதிடம்

ஜாதக குறிப்புகள், ஜாதக பலன்கள், திருமணப் பொருத்தம், எண்ஜோதிடம் என்பவற்றை -உங்களின் வாழ்க்கையின் அதிர்ஷ்டங்களை அறிந்திடவும் இன்றே நாடவேண்டிய இடம்

சதுர்ஷிகா ஜோதிட நிலையம்
மூத்தநயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

அத்துடன் திருமண சேவை இடம் பெறும்.
(C-3040)


# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம் 107





இத் தொடரில் தான் விளையாடிய மூன்று லீக் போட்டிகளிலும் தோல்வியடைந்த இலங்கை அணி, லீக் சுற்றின் 6 ஆவது போட்டியில் தென்னாபிரிக்க அணியை சந்தித்தது.

1998ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் திகதி போர்ட் எலிசபெத்தில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, முரளிதரனின் சுழலில் சிக்கி 49.5 ஓவர்களில் 231 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் துல்லியமாக பந்து வீசிய முரளிதரன் 10 ஓவர்கள் வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 47 ஓட்டங்களைக் கொடுத்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கேர்ட்சன் (46), அணித் தலைவர் குரோன்ஜே (0), ஜொன்டி ரோட்ஸ் (36) ஆகியோரை ஆட்டமிழப்புச்செய்து 3விக்கெட்டுக்களைப் பதம் பார்த்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 46. 4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 232 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடர் தோல்விக்கு தடை போட்டது.

இப்போட்டியில் முரளிதரன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் இரண்டு பிடிகளை அழகாக எடுத்து களத்தடுப்பிலும் ஜொலித்தார்.

இந்நிலையில் 1998ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி பெனோமியில் நடைபெற்ற லீக் சுற்றின் 7வது போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியைச் சந்தித்தது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.4 ஓவர்களில் 288 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் ஒரு ஓட்டத்தை எடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, முரளிதரனின் துல்லியமான சுழலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சரிய 39.2 ஓவர்களில் 173 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் இலங்கை அணி 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதில் முரளிதரன் 9.2 ஓவர்கள் பந்து வீசி 23ஓட்டங்களை மாத்திரம் வழங்கி சயிட் அன்வர் (59), அசார் மகமூட் (13), வசீம் அக்ரம் (13), அணித் தலைவர் ரசித் லத்திப் (6), வக்கார் யூனிஸ் (17) ஆகியோரை வெளியேற்றி 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அசத்தினர்.

(பயணிக்கும்)

பாலா


கொடிய வினை தீர்த்திடும் முருகா
எம்குற்றங்கள் போக்கிடுவாய்
வறிய மக்கள் வாடி வதங்கிடாமல்
வரம் தருவாய்.
ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் பெற்றிட நாடுங்கள்.
ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை.

# பஸ்ஸில் வெளி மாவட்...

யாழ். மாவட்டத்திலிருந்து ஏ-9 பாதையூ டாக வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ்களில் வெளிமாவட்டத்திற்கு பயணிப் பவர்கள் நாளை திங்கட்கிழமை முதல் முன்பதிவுகள் செய்து கொள்வது அவசியமாகின்து.

இதனையடுத்து பஸ் சேவைக்கான முன் பதிவுகளை யாழ். மத்திய பஸ் தரிப்பு நிலையம், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய இடங்களிலுள்ள வடபிராந்திய போக்குவரத்து சபையின் சாலைகளிலும் மேற்கொள்ள முடியும்.

எனினும் அவசர தேவைகளுக்காக பயணங்களை மேற் கொள்ளவுள்ளோர் பஸ் சேவைக்கான முன் பதிவுகளை யாழ். சிவில் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேற் கொள்ள இயலும்.

அத்துடன் பஸ் சேவைக்கான முற்பதிவுக் கட்டணமாக ரூபா 10/= அறிவிடப்படும் எனவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார். (ந-5)


கலியுக வரதா
எம் கர்மவினை தீர்த்து
எம்மை நல்வழிப்படுத்திடுவாய்
நல்லையம்பதி முருகா
அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்
கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்
ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை.

# தமிழ் மக்களுக்கு அமைதியே...

ஐ.நா. சபையின் தூதரக வார ஏட்டிற்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

வன்னி அகதி முகாம்களில் பணியாற்றிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக அவசர உதவிக் குழுவின் உறுப்பினராக இருந்த அவர் அண்மையிலேயே கனடா சென்றிருந்தார்.

அவரது நேர்காணலில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விபரம் வருமாறு;

நாங்கள் மனித உரிமை ஆர்வலர்களாகவே பெரியளவில் கருதப்பட்டோம். பாதுகாப்புக் காரணங்களுக்காக காலை 8.00 மணிக்கு முன்னரும் மாலை 6.00 மணிக்குப் பின்னரும் வீதிகளில் இருப்பதற்கு எமக்கு அனுமதி கிடையாது.

பொதுவாகச் சொல்வதானால் நாம் அங்கு இருக்கும் போது மக்கள் மோசமாக நடத்தப்பட்டமையை பார்க்கவில்லை. ஆனாலும் அடிமட்ட நிலையில் அந்த மக்கள் முட்கம்பி வேலிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளார்கள். பொதுவாகச் சொன்னால் அங்கு நடமாடும் சுதந்திரம் இல்லை. ஆனால் இது உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கான அடிப்படைவிதி.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கான நியதிகளை உருவாக்கி வைத்திருக்கிறது. அதன் முதல் விதியே அவர்களுடைய நடமாட்ட சுதந்திரம்தான். ஆழிப்பேரலை தாக்கியபோது உட்பட இலங்கையில் இதற்கு முன்னரும் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

மக்களை அடைத்து வைத்திருப்பதற்கான முதன்மைக் காரணமாக அரசு கூறுவது பாதுகாப்பு. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதனை ஏற்றுக்கொண்டுள்ளது என்றே நினைக்கிறேன். இருந்தாலும் இன்னும் அவர்கள் அடைத்தே வைக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களைச் சுற்றிலும் உள்ள பிரதேசம் படைமயப்பட்டுள்ளது. தொடக்கத்தில் படையினரும் இந்த முகாம்களில் மக்களுடன் சேர்ந்திருந்தார்கள். ஆனால் பின்னர் அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளின் ஆலோசனையின் பேரிலேயே இந்த வெளியேற்றம் நடந்தது என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் அது மற்றொரு விதி. முகாம்கள் படைமயப்படுத்தப்படக்கூடாது.

எப்படி இருப்பினும் முகாம்களின் வெளிப்பகுதி பெரிதும் படைமயப்பட்டே உள்ளது. ஆனால் உள்ளே பொதுமக்கள் மட்டும் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். என்ன இருந்தாலும் அது விதிமுறைக்கு மாறானது.

முகாம்களில் உட்கட்டுமானம் தேவையான அளவுக்கு இல்லை: ஆனாலும் மக்கள் வசிப்பதற்கு தங்களால் முடிந்ததை அதிகாரிகள் செய்திருக்கிறார்கள்.

அவர்கள் முன்னர் வசித்த பகுதிகள் எல்லாமே கண்ணிவெடிகளால் சூழப்பட்டிருக்கின்றன என்று சொல்லிவிட முடியாது. அவர்களை சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்புவதில் ஆபத்துக்கள் இருக்கவே செய்கின்றன. அது வரைக்கும் அவர்கள் (அரசு) தங்களால் முடிந்ததைச் செய்கிறார்கள். நான் நினைக்கிறேன். அந்த மக்களுக்கு உணவு அளிப்பது குறித்தே அதிகாரிகள் அதிகம் சிந்திக்கிறார்கள். உண்மையில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுதான் பிரச்சினையே.

பாகிஸ்தானில் மக்கள் தமது குடும்பத்தினருடன் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறு செல்வதற்கு வசதி இன்றி இருந்தவர்களுக்கு முகாம் வசதிகள் செய்யப்பட்டன. ஆனால் அந்த மக்களுக்கு நடமாட்டச் சுதந்திரம் இருந்தது.

அவர்கள் முகாம்களைவிட்டு வெளியேறிச் செல்வதற்கான சாத்தியங்களும் இருந்தன. அமைதி அந்த மக்களுக்கு உடனடியாகத் தேவை. எல்லோரையும் போலவே தமிழர்களும் அமைதியுடன் வாழவே ஆசைப்படுகிறார்கள்.

தமது பிள்ளைகளை அமைதியாக வளர்க்கவே விரும்புகிறார்கள். போர் எப்போதுமே போர்தான். ஒரு கட்டத்தில் நீங்கள் அமைதிக்குத் திரும்பியாக வேண்டும். அதுதான் இப்போது அந்த மக்களில் பெரும்பான்மையானவர்களுக்குத்தேவையாக இருக்கிறது. அங்கு இப்போது உள்ள மிகப் பெரிய பிரச்சினை அந்தமக்களுக்கான நடமாட்ட சுதந்திரம்இல்லாமைதான். அது உண்மையில்அனைத் துலகச் சட்டங்களின் அடிப்படை அதை நடைமுறைப்படுத்துவது எமது உரிமையும் கடமையும் கூட என்றார். அவர். (ந-5)

## கொமர்ஷல் வங்கியின் 365 நாள் சேவை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் வருடம் முழுவதுமான 365 நாள் சேவை இன்று ஞாயிற்றுகிழமை தொடக்கம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது இதுபற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தின் நகரப்பகுதியில் முதலாவதாக இச்செயற்திட்டம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. பின்வரும் காலங்களில் யாழ். மாவட்டத்தின் ஏனைய கிளைகளிலும் இது விஸ்தரிக்கப்படவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை வங்கிச் சேவை இடம் பெறவுள்ளது. மேலும் கொமர்ஷல் வங்கி வர்த்தகச்சேவை மட்டுமன்றி கல்வி, கைத்தொழில் அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, தொழிற்பயிற்சி என்பவற்றை லயன்ஸ் கழகங்கள் ஊடாக முன்னெடுத்து வருவதாக யாழ்ப்பாண சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.ரவீந்திரா தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர் எஸ்.ராஜசூரியர், சிரேஷ்ட செயற்பாட்டு அதிகாரி எஸ்.ரவிதாஸ், செயற்பாட்டு உதவிப் பொது முகாமையாளர் எஸ் பண்டாரநாயக்கா ஆகியோர் கொண்ட விசேட குழுவினர் கலந்து கொண்டனர். (ந-7)

**நியூ சிற்றி ரேடர்ஸ்**

சொனி ,சொனிக்கா ,பனசொனிக் ரேடியோக்கள் ,பனசொனிக், சொனிக்கா கசற் ரெக்கோடர் ,வோக்மன் ,கார் ரேடியோ ,ஸ்பீக்கர், சொனி ,பனசொனிக் ,LG கலர் T.V ,டிஸ் ரி.வி ,ரிசீவர் ,சொனி, பனசொனிக் டிஜிற்றல் DVD பிளேயர் ,ஸ்ரப்பிளைஷர் ,கிறைண்டர் , சார்ச்சர் லைட் ,றைஸ் குக்கர் ,சார்ச்சர் ரோச் ,இன்ரெக்(INTEX) வூபர், கொட்பிளேட் ,அயன் மற்றும் எலக்ரோனிக் எலக்ரிக்கல் உதிரிப் பாகங்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

நியூ சிற்றி ரேடர்ஸ்,
319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P.:- 021 222 3226

(இத்தாபனம் ஸ்ரான்லி றோட், K.K.S. றோட் சந்தியில் இருந்து சத்திரச்சந்திப் பக்கமாக K.K.S. றோட்டில் 6 ஆவது கடை)

(C-3018)

## 2 இளம் பெண்...

பட்ட இரு பெண்களும் 17 மற்றும் 20 வயது உடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையகத்தின் மஸ்கேலியா பகுதியைச் சேர்ந்த இந்த இரு பெண்களும் இந்தப் பகுதியில் உள்ள இரு வீடுகளில் வேலை செய்து வந்ததாகவும், விசாரணைகள் தொடர்பதாக தெரிவித்த பொலிஸார், இருவரது சடலங்களும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மரணத்துக்கான காரணம் என்ன என்பது கண்டறியப்படும் எனவும் தெரிவித்தனர். (ந-5,14)

## கூட்டுப்...

தரைப்படையின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜி.பி.ஆர்.டி. சில்வா வரவேற்றார். கூட்டுபடைத் தளபதி யாக பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் சரத் பொன் சேகா யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட முதலாவது பயணம் இது வாகும். பலாலி படைத் தளத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், யாழ்ப்பாணத்தின் பாது காப்புநிலைவரம் குறித்தும் வடக்கின் வசந்தம் திட்டத்துக்கு படையினர் வழங்கி வரும் ஆதரவு குறித்தும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி சில்வா விளக்கமளித்தார். (ந-5)

# மரண அறிவித்தல்

## திருமதி தவராஜா மகேஸ்வரிஅம்மா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தவராஜா மகேஸ்வரிஅம்மா 15.08.2009 அன்று காலமானார். அன்னார் கதிரேசு தவராஜா(ஓய்வு பெற்ற தபால் ஊழியர், வட்டுக்கோட்டை) அவர்களின் அன்பு மனைவியும் நவீந்திரன் (Y.M.H.A, வட்டுக்கோட்டை), சந்திரவதனா, புவனேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் யதீஸ்குமாரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (16.08.2009) இன்று அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானசம்மந்தர் வீதி,
வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்,
கணவன்,பிள்ளைகள்.

(c-3042)




## யாழ். மாவட...

எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகாணும் பொருட்டு பாதுகாப்பு தரப்புடன் தான் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## பத்மநாத...

ஆயுதம் விநியோகம் செய் தமை, சட்டவிரோதமாக நிதி வசூலித்தமை, போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டமை மற்றும் சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கே.பிக்கு எதிராக வழக்குதாக்கல் செய்யப் பட உள்ளதாக சட்ட மா அதிபர்திணைக்கள தகவல்கள் மேலும் தெரிவிக் கின்றன. (ந-5)

**மலிவு விற்பனை Sale**

பாவிக்கக் கூடிய நிலையில் உள்ள பெறுமதியான பல் துறையும் சார்ந்த பழைய புத்தகங்கள் ஏராளமாக கிடைக்கப் பெற்றுள்ளன அவற்றை இன்று முதல்-எமது நல்லூர் சிறப்பு விற்பனை நிலையத்தில் பார்வையிடலாம். இதில் மருத்துவப் புத்தகங்களும் அடங்கும்.

நல்லூர் பின் வீதி (றியோ கிறீம் கவுஸ் அருகில்)
விலை:- 20/=, 30/=, 50/=, 100/=, 150/=, 500/=
அன்னை புத்தகசாலை,
சிறப்பு விற்பனை நிலையம்,
நல்லூர்.
T.P.:- 222 9881 (C-3041)

## 50ஆவது ஆண்டு திருமண நிறைவு விழா

## திரு.திருமதி உலகநாதன்-நவமணி



அன்புடையீர்,

நிகழும் விரோதிவருடம் 2009 ஆகஸ்ட் 16ஆம் திகதி (ஆடி 31)ஞாயிற்றுக்கிழமை காலை 9.05 மணி தொடக்கம் 10.35 மணிவரையுள்ள சுபவேளையில் எமது பெற்றோருக்கு 50-வது ஆண்டு திருமண விழாக் கொண்டாட இறைவன் அருள் புரிந்துள்ளார்.

இவர்களை ஆசீர்வதித்து பல ஆண்டுகள் வாழ வாழ்த்துகின்றோம். தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் சமுகமளித்து மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

186/11, பருத்தித்துறை வீதி,
குருநாதசுவாமி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
உ.பீஷ்மா-மகன் (வலம்புரி)

(C-3039)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.